ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

அல்வாய் - மனோகரா

இதழ் 5

ஆனி 1–31 2021

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

நாங்கள் - 5 ஆவது இதழ் வாயிலாக எம்மவர்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. நாங்கள் இதழ் தற்போது எம்ஊரவர்கள் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளமை மகிழ்வையும் புதிய உத்வேகத்தையும் எமக்கு அளிக்கின்றது. காலம் விரைவாக சென்று கொண்டிருக்கின்றது, ஆவணப்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் எம்மிடையே காணப்படுகின்றன அவற்றை நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஆவணப்படுத்த வேண்டிய தேவை உடையவர்களாக இருக்கின்றோம். எமது வாழ்கை முறை, வாழ்வாதாரம், பொருளாதாரம், கல்வி, விளையாட்டு, பண்பாடு, நிகழ்வுகள், கழகம், சனசமூக நிலையம், கோயில்கள், கிணறுகள், கலைஞர்கள், சுய தொழில் முயற்சியாளர்கள், கல்வியாளர்கள், மூதாதையர்கள், கடைகள், குறிச்சிகள், வீட்டு அமைப்புகள், சோதிடர்கள், வைத்தியர்கள், மைதானம், அற்புதங்கள், சங்கங்கள் என எமது ஆவணப்படுத்தலின் எல்லைகள் நீண்டு செல்லும். உண்மையான தகவல்களை தெரிந்தவர்கள் துணிவாக எழுதுங்கள். இது எமக்கான பத்திரிகை. அடுத்த தலை முறைக்கு நாம் கையளிக்க வேண்டிய முக்கிய ஆவணம் “நாங்கள்” என்பதை யாரும் மறந்து விடாதீர்கள்.

இப்பத்திரிகையில் சிறுவர் பகுதிக்கென நாம் ஒரு பக்கத்தை ஒதுக்குகிறோம் என நாங்கள் அறிவித்தும் பலர் அதில் கவனமெடுக்காது இருப்பது வருத்தத்தை தருகிறது. பெற்றோர்கள்தான் பிள்ளைகளை ஊக்குவித்து எழுதத் தூண்ட வேண்டும். மேலும் இங்கு இடம்பெறுகின்ற விடயங்களில் ஏதேனும் முக்கிய விடயங்கள் தவற விடப்பட்டால் அவற்றை சுட்டிக்காட்டி ஆதாரத்துடன் எழுதினால் அவற்றை பிரசுரித்து முழுமையை அடையலாம். நாங்கள் இதழ் பல்வேறு சமூக சேவைகளை, கல்வி உதவிகளை, வழிகாட்டல்களை, உளவள ஆலோசனைகளை எதிர்காலத்தில் வழங்கவுள்ளது. நாம் அனைவரும் ஒற்றுமையாக கைகோர்ப்பதன் ஊடாக இலங்கையில் முதற்தர கிராமமாக எமது கிராமத்தை வடிவமைக்க முடியும். எம் உள்ளங்களில் பொதுவான எண்ணம் மலர்ச்சியுற வேண்டும். நான் என்ற மமதை விடுத்து நாங்கள் என அனைவரும் ஒன்றிணைந்து நீர் குமிழி போன்ற இவ்வாழ்வில் வாழ்ந்த காலத்தை சாதனைக்காலமாக மாற்றுவோம்.

- க. பரணீதரன்

**கல்வியே எங்களை உயர்விக்கும்...**

**உள்ளே...**

1. அல்வாய்க்குப் பெருமை சேர்த்த கல்வியாளர் அமரர் த.இராசலிங்கம் MP பற்றிய ஒரு பார்வை
2. எமதூரின் பிரபல விஷகடி வைத்தியரும் பார்வை வைத்தியருமான அமரர் கந்தையா வேலுப்பிள்ளை
3. சங்கடப்படலை கொண்ட குடிலும் வீடுகளில் காணப்பட்ட மாலும்
4. நினைக்கப்பட வேண்டிய ஆளுமை ஹார்மோனியச் சக்கரவர்த்தி அமரர் முத்து திருநாவுக்கரசு(முத்துத்தம்பி)
5. குறிச்சி – 3 – மடத்துக்கடவை
6. விக்றறி கழகமும் பேசப்பட வேண்டிய இரண்டு கரப்பந்தாட்ட ஜாம்பவான்களும்
7. சிறுவர் ஆக்கம் – எனது வகுப்பாசிரியர்
8. எமது கழகத்தின் மறைந்த முன்னாள் வீரர் அ.சௌந்தரதாசன்
9. எம்மவரும் ஆலடியான் மீதான நம்பிக்கையும்
10. அது ஒரு காலம் – 5 எழுபதுகளுக்கு முன்னர் நாங்களும் எமது விளையாட்டு அணிகளும்
11. வன்னியத்தெய்வம்
12. அரசப்பு கிணறு
13. நாடக ஆளுமை அரங்கிசைவாணர் இ.சிவபாதம்
14. “மாசி”யின் ஜோக்ஸ்
15. மீள் பிரசுர நம்மமவர் கவிதைகள்
    கனகசபாபதி செல்வநேசன்
    க.முரளீதரன்
    த.மோகன்ராஜ்
    கன.செந்தில்நேசன்
    கணேசன் மதுஷன்
16. மற்றும் பல செய்திகள்...

தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com



# அல்வாய்க்குப் பெருமை சேர்த்த கல்வியாளர்: அமரர் த.இராசலிங்கம் MP பற்றிய ஒரு பார்வை

■ கலாநிதி த.கலாமணி

எமது ஊருக்குப் பெருமை சேர்த்த முதன்மையாளர்களுள் முக்கியமானவர் அமரர் த.இராசலிங்கம் MP ஆவார். எம்மவர்க்கு பாடசாலைக் கல்வி மறுக்கப்பட்டு, உயர் கல்விக்கு வாய்ப்பே இல்லாத ஒரு காலத்தில் பட்டப் படிப்பை முடித்து, "எமது சிறுபான்மைத் தமிழ்ச் சமூகத்தில் முதலாவதாக MA பட்டம் பெற்றவர்" என்ற சிறப்பையும் பெற்றுக் கொண்ட அமரர் இராசலிங்கம் அவர்களின் வரலாற்றைப் பதிவு செய்து கொள்வது என்றும் எம்மூருக்குப் பெருமை சேர்ப்பதே.

இராசலிங்கம் அவர்கள் தம்பிப்பிள்ளை ஆசைப்பிள்ளை தம்பதியினர்க்கு இளைய மகனாக 21.11.1933 இல் பிறந்தார். தேவரையாளிச் சைவ வித்தியாசாலையில் (தேவரையாளி இந்துக்கல்லூரி) ஆரம்பக்கல்வியைப் பெற்றுக் கொண்ட இவர், ஞானாசாரியார் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக்கல்வியைத் தொடர்ந்தார். இந்தியாவில் செறாம்பூர்க்கல்லூரியிலும் லோயலாக் கல்லூரியிலும் உயர்கல்வியைப் பெற்றுக் கொண்ட இவர் சென்னை சர்வகலாசாலையில் B.A (Econ) பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இந்திய அரசின் புலமைப் பரிசில் பெற்று சென்னை இராசதானிக் கல்லூரியில் M.A பட்டம் பெற்ற வகையில் இலங்கைச் சிறுபான்மைத் தமிழருள் முதலாவது M.A பட்டதாரி என்ற பெருமையைத் தமதாக்கிக் கொண்டார்.

உயர்கல்வியை முடித்துக் கொண்டு கொழும்பு புனிதயோசெப் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்ற இராசலிங்கம் அவர்கள் அங்கு சிறந்த சேவையாற்றி பலரின் நன்மதிப்பையும் பெற்று, கல்வித் திணைக்கள பாடநூல் ஆலோசனைக் குழுவிலும் உறுப்பினராக விளங்கினார். பேராதனையில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை முடித்துக் கொண்ட இவர் கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரியாகி, பின்பு உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி ஆகவும் 1977 வரை பணிபுரிந்தார்.

சரஸ்வதி தம்பிமுத்து அவர்களை மணம் செய்து கொண்ட இவருக்கு பத்மலிங்கம், இந்திரலிங்கம், சிவாஜினி, இராஜேந்திரலிங்கம் ஆகியோர் இல்லற வாழ்வின் பேறான பிள்ளைச் செல்வங்கள், பிள்ளைகளும் இன்று நல்ல நிலையில் உள்ளார்கள். இந்திரலிங்கம் அவர்கள் MBBS பட்டம் பெற்று வைத்திய அதிகாரியாகப் பணிபுரிகின்றார். பிள்ளைகள் படிக்கின்ற காலத்திலே இராசலிங்கம் அவர்கள் பிள்ளைகள் நித்திரை தூங்காது விழித்திருப்பதற்குக் கையாண்டயுக்தியை நான் இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். பிள்ளைகளை மேசையின் முன்னால் அமர்ந்து படிக்கச் சொல்லிவிட்டு, மேசைக்குக் கீழே உறங்கிவிடுவார். பிள்ளைகள் அப்பாவின் மீது கால்பட்டு விடக்கூடாதே என்று கவனமாக இருந்து, நித்திரை தூங்காது படிப்பார்கள்.

1977 இல் இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியானது சிறுபான்மைத் தமிழரைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கென இராசலிங்கம் அவர்களின் பெயரையே உடுப்பிட்டித்தொகுதி அபேட்சகராக முன்மொழிந்தது. ஆனால், இராசலிங்கம் அவர்களோ ஒரேயடியாக மறுத்து விட்டார். "தேர்தலில் போட்டியிடுவதானால் வட்டாரக் கல்வி அதிகாரிப் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும். அவ்வாறு விலகிக் கொள்வதனால் 9 வருட சேவையையே முடித்துள்ள எனக்கு ஓய்வூதியம் கிடைக்காது. அதனால் தேர்தலில் தோல்வியடைந்தால் என் குடும்பம் நடுத்தெருவில் நிற்கவேண்டும் வன்முறை செய்பவர்களைச் சந்திக்கும் தைரியம் எனக்கு இல்லை. அவமானம் ஏற்படும். அவற்றை என்னால் தாங்க முடியாது" எனக் கூறி, தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களின் வேண்டுகோளை மறுத்தமையால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இந்நிலையில், வல்வை இளைஞர் பேரவை ஒன்றுகூடி, எப்பாடு பட்டேனும் இராசலிங்கம் அவர்களைச் சம்மதிக்க வைப்பது எனத்தீர்மானம் எடுத்து, கூட்டாகச் சென்று, "நாங்கள் வல்வை இளைஞர் பேரவை உறுப்பினர்கள். சாம, பேத, தான, தண்டத்திற்கு தயாரான எங்களை நம்பி நியமனத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று வேண்டினார்கள். அக்கோரிக்கையினால் மனம்மாறி தேர்தலில் நிற்பதாக இராசலிங்கம் அவர்கள் ஒப்புக்கொண்டார்.

தேர்தல் காலத்தில் இராசலிங்கம் அவர்களுடன் போட்டியிட்டவர்கள் சாதியை முதன்மைப்படுத்தியே எதிர்ப்பிரசாரம் செய்தனர். பனை ஏறுபவர் ஒருவரின் படத்தை வரைந்து அவருக்கு முட்டியைச் சின்னமாகக் கீறி நையாண்டி செய்தனர். கரவெட்டியில் பிரசாரக்கூட்டத்தில் சிவசிதம்பரம் MP

இன் தம்பி, தானே என்று இவருடன் போட்டியிட்ட மோதிலால் நேரு நியாயப்படுத்தினார். இவ்வாறான எதிர்ப் பிரசாரகர்களின் நடவடிக்கைகள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இக்கட்டான நிலையைத் தோற்றுவித்தது. சாதியின் பெயரால் இடம் பெறும் எதிர்ப்பிரசாரம் காரணமாக உடுப்பிட்டித் தொகுதியில் இராசலிங்கம் அவர்கள் தோல்வியுற்றால் அது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோல்வியாகிவிடும் என்று அவர்கள் கலக்க மடைந்தனர். அதனால் முழுப்பிரசார நடவடிக்கைகளையும் உடுப்பிட்டித் தொகுதியின் பக்கம் திருப்பி முழுமையான கவனம் செலுத்தினர். நெல்லியடியில் மகாத்மா அரங்கருகில் இடம் பெற்ற பிரசாரக்கூட்டத்தில் முன்னாள் MP சிவசிதம்பரம் அவர்கள் "மோதிலால் நேரு முன்னர் சொன்னது தவறு. எனது கொள்கையை ஏற்று என்னுடன் நிற்கும் இராசலிங்கம் தான் எனது தம்பி. எனவே எனக்கு முன்னர் வாக்குப்போட்ட நீங்கள் இம்முறை என் தம்பி இராசலிங்கத்திற்கு போடுங்கள்" என்று கரவெட்டி மக்களிடம் வேண்டினார்.

கரவெட்டியில் சிவசிதம்பரம் அவர்களுக்கு இருந்த செல்வாக்கு அனைவரும் அறிந்ததே. இவரின் வார்த்தைக்கு இருந்த செல்வாக்கை ஒரு சில நாட்கள் இராசலிங்கம் மாமா அவர்களுடன் பிரசாரத்திற்குச் சென்ற நான் கண்டுகொண்டேன். பல வீடுகளில் "எங்களுடைய ஐயா (சிவ சிதம்பரம்) எங்களுக்குச் சொல்லி விட்டார். நாங்கள் இராசலிங்கத்துக்குப் போடுவோம்" என்று உறுதியளித்தனர். தேர்தல் நெருங்க நெருங்க இராச லிங்கம் அவர்களுக்கு எதிரான பிரசாரங்கள் புதுவடிவங்களை எடுத்தன. இளைஞர்கள் இந்த நடவடிக்கைகளினால் பெரிதும் கலவரமடைந்தனர். தேர்தல் நாளில் ஒவ்வொருவரும் தமது பெற்றோரிடம் இராசலிங்கத்துக்கே போட வேண்டும் என்று சத்திய வாக்குறுதி கேட்டனர். தேர்தலில் இராசலிங்கம் அவர்கள் 18768 வாக்குகள் (63.44%) பெற்று 14747 அதிகப் படியான வாக்குகளால் பெரு வெற்றி பெற்றார். தமிழர் கூட்டணித் தலைமை தமது கட்சியின் வெற்றிவிழாவை இரரசலிங்கம் MP அவர்களின் உடுப்பிட்டித் தொகுதியில் கொண்டாடுவது என முடிவெடுத்தபோது, அதனை வல்வெட்டித்துறையிலேயே கொண்டாடவேண்டுமென இராசலிங்கம் MP கேட்டுக் கொண்டார். கட்சித் தலைமை ஏற்றுக் கொண்டது. இராசலிங்கம் அவர்களின் வெற்றி கட்சியின் வெற்றி மாத்திரமன்று, "மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது சிறுபான்மைத் தமிழர்" என்ற வகையில் சிறுபான்மைத் தமிழரின் வெற்றியுமாகும்.

அமரர் இராசலிங்கம் MP அவர்கள் ஒரு கல்வியாளராகவும் திறமை வாய்ந்தவராகவும் இருந்தமையால் பல்வேறு நிறைவேற்றுக் குழுக்களின் உறுப்பினராக இருக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அரசபொறுப்புகள் முயற்சிக் குழு உறுப்பினராக இருந்ததன் காரணமாக பல்வேறு நாடுகளுக்கும் சுற்றுலா செல்லும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. அத்தோடு, தேசிய மட்டத்தில் கொள்கை மாற்றங்களை, கல்வியிலும் பிறவற்றிலும் ஏற்படுத்து வதற்கும் பலசேவைகளை மக்கள் பெறச் செய்வதற்கும் அவரும் முக்கிய காரணஸ்தராக விளங்க முடிந்தது. கரவெட்டியில் "இராசகிராமம்" இவர் பெயரில் உருவானது.

அமரர் MP இராசலிங்கம் அவர்கள் உடுப்பிட்டித் தொகுதிக்கு ஆற்றிய சேவைகள் பல. இங்குள்ள பல்வேறு கல்லூரிகளுக்கும் பாடசாலை களுக்கும் கட்டட வசதிகளையும் நீர், மின்விநியோக ஏற்பாடுகளையும் செய்ததோடு, கிராம அபிவிருத்திக்கு தேவையான நீர், மின், சாலைகள், கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடங்கள் என பல்வேறு தேவைகளையும் அவர் நிறைவேற்றினார். வடபகுதியில் சாராய வடிசாலையை அமைப்பதற்கு திக்கத்தைத் தெரிவு செய்து, திக்கம் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்கினார். இப்பரந்த சேவைத்திட்டத்தில் எமது கிராமமும் மின்சார இணைப்பைப் பெற்றுக் கொண்டது. இவற்றை எல்லாம் கண்டு



மகிழ்ச்சியடைந்த சிவசிதம்பரம் MP அவர்கள் 1981 இல் அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலையில் இடம் பெற்ற பாராட்டுவிழாவில், "உடுப் பிட்டித் தொகுதியில் நான் MP ஆக இருந்த காலத்தில் செய்த சேவை யைவிட தம்பி இராசலிங்கம் நான்கு வருடங்களில் நான்கு மடங்கு சேவைகளைச் செய்துள்ளார் என்பதை நன்கு அறிவேன்" என



வியந்து பாராட்டினார். ஒரு சமயம் பாராளுமன்றத்தில் தமிழ் மக் களிடையே உள்ள சாதிக்குறை பாடுகளைச் சுட்டிக்காட்டி சிங்கள அரசியல் வாதிகள் பேசியபோது, அதனை மறுதலித்துப் பேசிய இராசலிங்கம் MP அவர்கள் சிங்கள வரிடையே உள்ள சாதிவேறு பாட்டையும் சுட்டிக்காட்டி, "நீங்கள் சிறுபான்மை மக்களுக்கு என்ன செய்தீர்கள்?" என கேள்வி எழுப்பி அவர்களை வாய் அடைக்கச்




செய்தார். இதனைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு போதும் மறக்க முடியாது.

அமரர் இராசலிங்கம் அவர்கள் பாராளு மன்ற உறுப்பினராக வந்த பின்பும் கூட, "சாதியின் தாக்கம்" அவருக்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பல உண்டு. உடுப்பிட்டித்தொகுதியிலுள்ள பல்வேறு பாடசாலைகளுக்கும் மாடிக்கட்டடத் தொகுதி களையும் அமைப்பதற்கு வழி செய்தாராயினும் "அவர் தங்களுடைய பாடசாலைக்குத்தான் எல்லாம் செய்கிறார்" என்று தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு மாடிக்கட்டடம் அமைத்துக் கொடுத்த தைச் சுட்டிக் குறைகண்டனர். இராசலிங்கம் MP அவர்கள் ஏற்படுத்தித் தந்த தமது ஆலயத்திற்கான மின் இணைப்பைத் தொடக்கி வைப்பதற்காக அவரை அழைத்து, கோயிலுக்குள் "இராசலிங்கம்" செல்வதைத் தடுப்பதற்காக கோயிலுக்கு வெளியே மரம் ஒன்றில் ஸ்விட்ச் பலகை ஒன்றைப் பொருத்திய ஆலய நிர்வாகத்தினர் அங்கிருந்தே இணைப்பை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். தமது தேவைகளுக்காக அவரை வீட்டில் சந்திக்க வரும் "சாதிமான்கள்" சிலர் அவர் வீட்டில் ஏதும் தந்தால் குடிக்கக் கூடாதே என்பதற் காக வெள்ளிக்கிழமைகளிலேயே வரத்தொடங் கினர். ஏதும் குடிக்கக் கொடுத்தால் அன்று வெள்ளிக்கிழமை விரதம் என்று கூறி மறுத்தனர். இவ்வாறாக, சாதியின் பெயரால் இராசலிங்கம் அவர்களுக்கு புறக்கணிப்புகள் இருக்கவும் செய்தன. ஆனால் அவர்களுக்கு தக்க சமயங் களில் சரியான பதிலடியை கொடுத்தார்.

1983 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி யினர் தமது பதவிகளைத் துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது, இராசலிங்கம் MP அவர்களும் பதவி துறக்க நேர்ந்தது. அதன் பின்பு எமது ஊர் மக்களோடு மக்களாக ஊரிலேயே வாழ்ந்தார்.

அமரர் இராசலிங்கம் அவர்கள் எளிமை யானவராகவும் நேர்மையானவராகவும் விளங்கி யவர். சில அரசியல்வாதிகளுக்குரிய "தந்திரமோ" அல்லது கபடத்தனமோ அறியாதவர். யுத்த நெருக்கடிகளினாலும் அரசியல் நெருக்கடிகளினா லும் அவருக்கு இருதய பாதிப்பு ஏற்பட்டது. 12.02.1991 இல் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட அவர் 20.02.1991 இல் கால மானார். கல்வியாளரான அவர் தினகரனிலும் வேறு பத்திரிகைகளிலும் எழுதிய இலக்கியக் கட்டுரைகளும் சமூகக் கட்டுரைகளும் பொருளியற் கட்டுரைகளும் நூலுருப்பெறாமற் போய்விட்டமை கவலைக்குரியது. தேசிய ரீதியிலும் வடமராட்சி யிலும் பல்வேறு சேவைகளையாற்றி என்றும் எமது ஊருக்குப் பெருமை சேர்த்தவர் அமரர் இராச லிங்கம் அவர்கள். அல்வாய்க் கிராமத்தின் தவமைந்தர் அவர். ●



# எமதூரின் பிரபல விஷகடி வைத்தியரும், பார்வை வைத்தியருமான அமரர் கந்தையா வேலுப்பிள்ளை

■ சிவகுரு கணேசலிங்கம்

எழில்மிகு அல்வாய்க் கிராமத்தை அலங்கரித்தவர் களில் ஒருவரான அமரர் அவர்கள் **1909.04.15** இல் கந்தையா சின்னக்குட்டி தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாகப் பிறந்தார். இவரின் உடன் பிறப்புக்கள் அமரர்களான தம்பித்துரை, தங்கம், பாக்கியம், தங்கச்சியம்மா, பொன்னம்மா ஆகியோர் ஆவார்கள்.

இவர் சிறுபராயம் தொட்டு இறைபக்தி, நேர்மை, ஒழுக்கம், குடும்பப் பொறுப்பு என்பவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கினார். குடும்பப் பொறுப்புகள் காரணமாக கல்வியை இடை நிறுத்தி "பனைசார்" உற்பத்தி வல்லுனராகத் திகழ்ந்து வருமானத்தைப் பெருக்கி தன் பெண் சகோதரி களுக்கு தனது சகோதரரான தம்பித்துரையின் உதவியோடு திருமணம் செய்து வைத்தார். பின்னர் தனது இல்லத் துணையாக "வடலித் தோட்டத்தைச்" சேர்ந்த "அன்னப் பிள்ளை" என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

இவ்வளவு பொறுப்புகளுக்கு மத்தியிலும் நெல்லியடி கரவெட்டிப் பிரதேசத்தை தனது தொழிலுக்கான பிரதேசமாக்கி அங்கு சிறு கொட்டில் ஒன்றை அமைத்து தனது மருமகனான செல்வராசாவுக்கு தொழிலைப் பழக்கி இருவருமாக தொழில் மேற்கொண்டு வந்தார்கள். இவர் எப்போதும் திருநீற்றுப் பூச்சுடனேயே காணப்படுவார். இதற்கு மத்தியில் அக்கால தேவைக்கேற்ப "விஷகடி வைத்தியத்தை" முறையாக பயின்று அதில் பிரசித்திபெற்று விளங்கினார். பார்வை மூலம் விஷமிறக்குதல் குறைபாடு நீக்குதல், குழந்தைகளுக்கு தொங்கல் விழுத்தி வயிற்றுப் போக்கைக் குணப்படுத்துதல், திருநீறுபோடுதல் போன்ற வற்றிலும் கைதேர்ந்தவராக விளங்கினார். இவரின் வைத்திய நுணுக்கங்களை அறிந்த, சித்த மருத்துவத்துறையினர் பல விடயங்களை இவர் மூலமாக கேட்டறிந்தனர். பல பயன்களும் பெற்று மருந்துகளும் கண்டறிந்தனர்.

மேலும் கலைத்துவம் மிக்க இவர் ஒரு நாடக நடிகராவார். **1975**ம் ஆண்டு எமது ஆலய சிவராத்திரி விழாவிற்கு "பூதத்தம்பி" என்ற ஆட்டக் கூத்தினை கரவெட்டியைச் சேர்ந்த அண்ணாவியார் "இரத்தினத்தின்" அண்ணாவியத்தில் மேடையேற்றி தானும் அதில் "கொழும்புராசா" என்ற பாத்திரத்தில் நடித்துள்ளார். இவர் மேல் கரவெட்டி பிரதேச மக்கள் மிகுந்த மரியாதையும், பயபக்தியும் கொண்டிருந்தனர். இவரின் கலைத்தோன்றல் களாக இவரின் மருமக்களான செல்வராசா மிருதங்கத்திலும், சந்திரா ஆர்மோனியத்திலும் விளங்க நடிப்புத்துறையில் பாக்கியராசா, கணேசலிங்கம், நவரத்தினம் ஆகியோரும் சிறந்து விளங்கினார்கள். "தனது பிள்ளைகளைப் போல மருமக்கள் யாவரையும் பலவழிகளில் ஆளாக்கியவர்." ●

# சங்கடப்படலை கொண்ட குடிலும், வீடுகளில் காணப்பட்ட மாலும்

கனகசபாபதி செந்தில்நேசன்

இன்று "அல்வாய் மனோகரா" என்று அழைக்கப்படும் எமது கிராமமானது முன்னர் "அல்வாய் தெற்குக் கிராமம்" என அழைக்கப்பட்டமையை நாம் எல்லோரும் அறிவோம். முன்னரான காலப்பரப்பில் எம்மூர் மக்களின் பழக்கவழக்கங்களை நம்மில் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எமது கிராமத்தில் அக்காலப்பரப்பில் இப்பொழுது காணப்படும் தார் ஊற்றிய வீதிகள் இருக்கவில்லை அவையாவும் ஒழுங்கைகளாகவே காணப்பட்டன. மின்சார வசதிகளும் இருக்கவில்லை. போக்குவரத்தை மேற்கொள்வதற்கான பெருவசதிகளும் இருக்கவில்லை. எமது அல்வாய்க் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை அவர்களிடம் "சோம செற்" மோட்டார்க்காரும். எமது கிராமத்தின் மேற்குப்புற எல்லையில் தேவரையாளியைச் சேர்ந்த நடேசு என்பவரிடம் ஏ.40 வகை மோட்டார்க்காருமே பாவனையில் இருந்தன. துவிச்சக்கர வண்டிகளும் மிகக் குறைவாகவே ஓரிருவரிடம் இருந்தன. எக்காரியங்களையும் முன்னெடுப்பதற்கு மக்கள் பெரும்பாலும் கால்நடையாகவே சென்று செயற்பட்டு வந்தார்கள். தூர இடங்களுக்குச் செல்வதற்கும், அவசரமாக வைத்திய சாலைகளுக்குச் செல்வதற்குமே மோட்டார்க்கார்களைப் பயன்படுத்தி வந்தார்கள். கடைகள் ஒரு சிலவே இருந்தன. மக்களின் அன்றாட தேவையைப் பூர்த்தி செய்வனவாக அவை இருக்கவில்லை. இதன் காரணமாக எம்மவர்கள் நெல்லியடியிலுள்ள மத்திய சந்தையை நாடிச் சென்றனர். இச்சந்தைக்குக் கால்நடையாகச் சென்று தமக்குத் தேவையான நானாவித பொருட்களையும் கொள்வனவு செய்து அவற்றினை ஆண்கள் சாக்குகளில் மூடையாகக்கட்டி தோள்களில் சுமந்தும், பெண்கள் கடகங்களில் வைத்து தலையில் சுமந்தும் கால்நடையாகவே வருவார்கள். நெல்லியடிச் சந்தைக்கும் எமது அல்வாய் தெற்குக் கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் கிட்டதட்ட இருமைல்களாகும். இவ்வாறு கால்நடையாக வரும் இவர்களுக்கு இடையில் இளைப்பாறி வருவதற்கான தங்குமிடவசதி, தாகம் தீர்ப்பதற்கான நீர்வசதி எதுவும் இருந்ததில்லை. இதனைக் கருத்தில் கொண்டு எமது கிராமத்தின் முகவாயில் வளவிலிருந்த சண்முகம் உபாத்தியாயரும், அவரது மைத்துனர் மாணிக்கம் தலைமை உபாத்தியாராலும் அமைக்கப்பட்ட சங்கடப்படலை கொண்ட சிறுகுடில் வடிவமே இதுவாகும்.

### சங்கடப்படலை கொண்ட இச்சிறுகுடில் என்றால் என்ன?

சங்கடப்படலை கொண்ட இச்சிறுகுடில்கள் வலிகாமப் பகுதிகளிலும், தென்மராட்சிப் பகுதிகளிலும், வடமராட்சிப் பகுதியில் ஒரு சில இடங்களிலும் இருந்துள்ளன. இவை வலிகாமப் பகுதிகளில் நவீன மயப்படுத்தப்பட்டு இன்றும் காணப்படுகின்றன. எமது அல்வாயின் முகவாயில் வளவான மடத்துக்கடவையில் அமைக்கப்பட்டிருந்த இச்சங்கடப்படலை கொண்ட குடில் பன்னிரண்டு அடி நீளம் பத்தடி அகலம் கொண்ட தாக வளவில் அரைவாசியும், ஒழுங்கைக் கரையில் அரைவாசியும் கொண்டதாக குடிலின் இருமருங்கிலும் எட்டடி நீளமும் மூன்றடி அகலம் இரண்டடி உயரம் கொண்ட திண்ணைகள் அமையப்பெற்று நடுவே சங்கடப்படலை மரப்பலகையால் செய்யப்பட்டிருந்தது. திண்ணைகளுக்கு நடுவேயிருந்த சங்கடப்படலையூடாகவே வளவிற்குள் செல்ல வேண்டும். சங்கடப்படலையின் இருமருங்கிலுமுள்ளவெளி (திண்ணைகளின் மேல்) காணப்படும் வெளியானது மட்டை வரிச்சால் உள் செல்லாதவாறு அடைக்கப்பட்டிருந்தது.

வெளியே காணப்பட்ட திண்ணையொன்றில் பெரிய மண்பானையில் தண்ணீர் நிறைக்கப்பட்டிருந்தது மேலும் குடிக்கும் பாத்திரங்கள் இரண்டும் அதன்மேல் வைக்கப்பட்டும் இருந்தது. களைப்படைந்து வருவோர் பொருட்களை இறக்கி வைத்து தாகம் தீர்த்து இளைப்பாறும் வகையில் இது அமைக்கப்பட்டிருந்தது. சங்கடப்படலை என்பது ஒடுக்க வழிப்பாதையைக் குறிக்கும். இரு திண்ணைகளுக்கு நடுவில் வீட்டுவளவிற்குச் செல்ல இது அமையப்பெற்றிருந்தது இவ்வாறு அமைந்த சங்கடப்படலை கொண்ட குடில் இது ஒன்றே எமது கிராமத்தில் அன்றைய காலப்பரப்பில் இருந்துள்ளமை அறியப்பட வேண்டிய விடயமாகும். மேலும் பனை ஓலை நிறைந்த எம் கிராமத்தில் பனையோலையால் வேயப்படாமல் இக்குடிலானது தென்னோலையினால் (கிடுகு) வேயப்பட்டிருந்தமை விசேடமாகும்.

### வீட்டில் காணப்பட்ட மால்கள்

எமது கிராமத்தில் வீடுகள் இருந்த போதும் அதற்கு மேலதிகமாக இந்த மால்கள் வீடுகளின் முன்பாக அமைக்கப்பட்டிருந்தன. இந்த மால்கள் பத்து அடிகளுக்கு மேற்பட்டதாக தேவையான அளவு நீளம் அகலம் கொண்டதாக இருந்தன. நாற்புறமும் அரைச்சுவர் கொண்டு எப்பக்கத்தாலும் வரக்கூடியதாக சிறுவழி விட்டும் இவை இருந்துள்ளன. வீட்டிற்கு வரும் விருந்தாளிகளை வரவேற்பதற்கும், பெண்கள் ஒன்று கூடி பன்னவேலைகள் செய்வதற்கும், இரவில் ஓய்வு நேர ஒன்று கூடலை மேற்கொள்ளும் ஆண்கள் கடதாசி விளையாட்டு, தாயம் எறிதல் விளையாட்டுக்களை மேற்கொள்வதற்கும் இம்மால்கள் பயன்படுத்தப்பட்டன. மேலும் இந்த மால்களுக்குள் எட்டடி, மூன்றடி கொண்ட உயரம் இரண்டடி கொண்ட திண்ணைகள் ஒன்று அல்லது இரண்டு திண்ணைகள் தலையணை இன்றி சாய்ந்து படுக்கக் கூடிய வசதி கொண்டதாகவும் அமைந்திருந்தன. சகல வசதி கொண்ட இம்மால்கள் எமது அல்வாய் மண்ணில் அதிகப்பற்றான வீடுகளில் இருந்தமை எம் முன்னவர்களின் எண்ணக்கருவாகும். இந்த மால்களில் பிள்ளைகள் சத்தமின்றி விளக்கொளியில் கற்கக் கூடிய வகையில் மேசைகளும் இருந்தன. இவ்வாறு காற்றோட்டம் நிறைந்த இம்மால்கள் எமது அல்வாயில் இன்று இல்லை. இவ்வகை மால்களில் பெரிய அளவிலான மால் நொச்சியடி வளவில் இருந்ததாகப் பல பெரியவர்கள் மூலம் அறியப்பட்டது. ●

# நினைக்கப்பட வேண்டிய ஆளுமை ஹார்மோனியச் சக்கரவர்த்தி அமரர் முத்து திருநாவுக்கரசு (முத்துத்தம்பி)

■ கணபதிப்பிள்ளை வரதவேல் ■

கல்வி, கலை, கலாசாரம் ஆகிய விழுமியங்கள் ஒருங்கே அமைந்த அரியாலை அல்வாய்க் கிராமங்களின் வழித்தோன்றலில் உதித்தவர் முத்துத்தம்பி என்று அனைவராலும் அன்பாக அழைக்கப் பட்டு வந்த திருநாவுக்கரசு அவர்கள். ***1943.10.30*** ம் திகதி முத்து கண்ணகை தம்பதியினருக்கு இரண்டாவது பிள்ளையாக எமது முன்னோர்கள் பலர் வாழ்ந்த துன்னாலை தெற்கில் அமைந்த வயலும் வயல் சார்ந்த இயற்கை எழில் ஒருங்கே அமையப் பெற்ற எமது ஊரின் கிளைக்கிராம மான குருக்கட்டுப் பகுதியில் பிறந்தார். இவருடைய தமக்கையார் திருமதி.திரவியம் நவரத்தினம் (காந்தம்) ஆவார். தந்தையார் முத்து அவர்கள் அரியாலையையும் தாயார் கண்ணகை எமதூரையும் பிறப்பிடமாகக் கொண்டவர் கள். இவர் சிறுபிள்ளையாக இருந்த போது இவரது குடும்பத்தினர் தந்தையாரின் ஊரான அரியாலைக்குச் சென்று வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். இவர் நல்லூர் ஆனந்தா வித்தியாசாலையில் கல்வி கற்றார். பின்பு கட்டடக்கலையில் ஈடுபட்டு சிறந்ததொரு கட்டடக் கலைஞராகவும், கட்டட ஒப்பந்தக்காரராகவும் மேலோங்கி நின்றார். அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின் கலைஞராகிய இவர் சிறுவயதிலிருந்தே சரித்திர நாடகங்கள் பலவற்றில் சிறுபாத்திரங்கள் ஏற்று இசையோடு பாடி நடிக்கத் தொடங் கினார். இவருடைய சாரீரவளம் இயற்கையாக அமைந்திருந்ததை இனம் கண்ட இவரது மைத்துனர் (அக்காவின் கணவர்) திரு.திரவியம் அவர்கள் அரியாலையைச் சேர்ந்த சங்கீத வித்துவான் திரு.பாலசிங்கம் அவர்களின் தந்தையாராகிய திரு.சபாபதிப்பிள்ளை அவர்களிடம் சங்கீதம் கற்பதற்காக சேர்த்திருந்தார். அங்கு சங்கீதத்தை முறையாகக் கற்றதோடு மட்டுமல்லாமல், இவருடைய ஒன்றுவிட்ட அண்ண னாகிய நாடகக் கலைஞர் அல்வாயூர் தம்பு பாலசிங்கம் அவர்களின் உந்துதலினால் காங்கேசன்துறை ஹார்மோனிய வித்துவான் பிள்ளை நாயகம் அவர்களிடம் ஹார்மோனிய வாத்தியத்தினை முறைப்படி கற்றுக் கொண்டதோடு இவரது ஹார் மோனிய அரங்கேற்றம் அரியாலை ஸ்ரீ கலைமகள் சரஸ்வதி அம்பாள் ஆலயமுன்றலில் நடைபெற்று பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார்.



***1965*** ம் ஆண்டு அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் அவ்வூர் மக்களால் நடாத்தப்பட்ட கலைவிழாவில் இடம்பெற்ற இசைக் கச்சேரிக்கும், அரிச்சந்திரமயான காண்டம் நாடகத்துக்கும் (அரிச் சந்திரன் - வடஅல்வையூர் தேவி என்றழைக்கப்பட்ட கந்தசாமி, சத்திய கீர்த்தி அதே ஊரைச் சேர்ந்த சுப்பிர மணியம் (சு.மகேஸ்வரன் அவர்களின் தந்தை), சந்திரமதி எமதூரைச் சேர்ந்த தம்பு பாலசிங்கம், லோகிதாசன் - திரவியம்சிவானந்தன்(இவரது அக்காவின் மகன்)) ஹார்மோனியம் வாசித்து பார்வையாளர் களின் மனங்களில் இடம்பிடித்துக் கொண்டதனால் அவ்வூரைச் சேர்ந்த வித்துவான் முருகேசு (ஆசிரியர்) அவர்களினால் பொற்கிளி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அக்காலங் களில் ஆலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாக் களில் நடைபெற்ற சின்னமேளம் (நடனநிகழ்வு), இசைக் கச்சேரி, காவடி ஆட்டம், பஜனைப் பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பக்கவாத்தியமாக ஹார்மோனியம் வாசித்து பார்வையாளர்களின் வரவேற்பைப் பெற்றிருந்தார்.



அரியாலை நாடகக் கலைஞ ரான V.K.இரத்தினம் அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்ட இசை நாடகங்களான அரிச்சந்திரமயான காண்டத்தில் அரிச்சந்திரனாகவும், சத்தியவான் சாவித்திரியில் இயமனாகவும், கண்ணப்பநாயனாரில் கண்ணப்பனாகவும் நடித்துள்ளார். இந்நாடகங்கள் பல இடங்களில் மேடையேற்றப்பட்டன. அத்துடன் நடிகமணி V.V. வைரமுத்து அவர் களின் இசைநாடகங்களுக்கும் ஹார் மோனியம் இசைத்திருந்தார். இலங்கையின் பலபாகங்களுக்கும் சென்று பல நூற்றுக்கணக்கான மேடைகளேறிய யாழ்சுண்டுக்குளி நாடகமன்றத்தினரின் "அடங்காப் பிடாரி" முழுநீள நகைச்சுவை நாடகத்தின் இசையமைப்பாளராக

இருந்ததோடு, அந்நாடகத்தில் சிறுபாத்திரங்களையும் ஏற்று நடித்தும் உள்ளார். இவ் நாடகமன்றத்தினரின் இன்னொரு தயாரிப்பான கி.பி.2000 என்ற நாடகத்துக்கும் இவரே இசையமைத்துள்ளார். எமது ஆலயத்தில் நடைபெற்ற மஹாசிவராத்திரி மற்றும் ஏனைய நாடக விழாக்களிலும் இடம் பெற்ற பல இசை நாடகங்களுக்கும் இவர் ஹார்மோனியம் வாசித்தமை என்றும் எம் நினைவில் நிற்கின்றன. இவர் நடிகமணி V.V. வைரமுத்து, நாடகக் கலைஞர்களாகிய V. K. இரத்தினம் V.N.செல்வராசா, V.செல்வரத்தினம், S.விவேகானந்தன் ஆகியோர்களது இசை நாடகங்கள் பலவற்றிற்கு பக்கவாத்தியக் கலைஞ ராக இருந்துள்ளார். அல்வாயூர் கவிஞர் நாடக மன்றத்தின் நடிகநாதமணி S.விவேகானந்தன் குழுவினரின் காத்தவராயன் (சிந்து நடைக் கூத்து) இலங்கை ரூபவாஹினியில் ஒளிபரப்பப் பட்ட போது அந்நாடகத்துக்கு இவரே ஹார்மோனியம் வாசித்திருந்தார். இவர் யாழ் சுண்டுக்குளி நாடகமன்றம், அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகசபா, காங்கேசன்துறை வசந்த கானசபா, அல்வாயூர் கவிஞர் நாடகமன்றம் போன்ற பல நாடகமன்றங்களின் பல நாடகங்களுக்கு ஹார்மோனியம் வாசித்தமை அத்துறையில் இவருடைய ஆளுமையைக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது. இவ ருடைய கலைச்சேவைகள் எல்வாவற்றிற்கும் மகுடம் வைத்தது போல் அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையத்தினரால் இவரது கலைச் சேவையைப் பாராட்டி "ஹார்மோனியச் சக்கரவர்த்தி" என்னும் பட்டத்தினை வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் எமதூர் மயிலிட்டியைச் சேர்ந்த தாய்மாமனாகிய கணபதிப்பிள்ளை கதிராசி (முத்துக்குட்டி) தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியாகிய புனிதவதியைக் கரம்பிடித்து இல்லற வாழ்க்கையில் ஜெயானந்தன் (டென்மார்க்), ஜெயாதரன் (அமரர்), ஜெயந்தன் (ஜேர்மனி) ஆகியோர்களை மக்கட் செல்வங்களாகப் பெற்றனர். அரியாலை நொத்தாரிஸ் வீதியில் அமைந்திருக்கும் இவரது இல்லத்தினைத் தேடி வருபவர்களை இவரது குடும்பமானது இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பதில் புளகாங்கிதம் கொண்டனர். இப்படிப்பட்ட பல திறன்களைத் தன்னகத்தே வைத்துக் கொண்ட இவர் பன்னிரண்டு வயதிலிருந்து நாற்பத்தேழு வயது வரை கலைச்சேவையுடன் இணைந்து வாழ்ந்து சுகயீனமுற்றதன் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் 1990.07.30ம் திகதி இறைவனின் பாதார விந்தங்களைச் சென்றடைந்தார்.

தகவல் :- திரு.திரவியம் சிவானந்தம் (மருமகன்)

## குறிச்சி - 3

# மடத்துக்கடவை

■ செல்லக்குட்டி கணேசன் ■

எமது ஊர் குறிச்சி பற்றிய ஆவணப்படுத்தலில் வதிரி வடக்கு மெதடிஸ்த மெஷன் தமிழ் கலவன் பாடசாலையில் தலைமை யாசிரியராகக் கடமையாற்றிய அமரர் க.தா.மாணிக்கம் உபாத்தியாயர் வாழ்ந்த இடமான "மடத்துக்கடவை" பற்றிய தகவல்களை பதிவு செய்து கொள்கிறேன்.

இக்குறிச்சியானது எமது ஊரின் பிரதான நுழைவாயில்களில் ஒன்றான கவிஞர் மு.செல்லையா வீதியின் முகப்பை வடக்கு எல்லையாகவும் வதிரி திக்கம் (றோட்) வீதியை மேற்கு எல்லையாகவும் மடத்துக் கடவை கிணற்றடிக்குச் செல்லும் ஒழுங்கையை வடக்கு எல்லையாகவும் பொருக்கர் பாதி குறிச்சியை கிழக்கு எல்லையாகவும் கொண்டுள்ள சிறிய நிலப்பரப்பாகும்.

ஏறத்தாழ நூற்றிஎழுபது (170) வருட காலத்திற்கு முற்பட்ட பூர்வீகத்தைக் கொண்ட மக்களாக இங்கு வாழ்ந்தவர்களைப் பார்க்கலாம். இருப்பினும் இங்கு வாழ்ந்த முன்னோர்கள் பற்றிய தகவல்களை சரியாக அறிய முடியாதுள்ளது. இருப்பினும் இவர்களின் வழித் தோன்றல்களின் மூலம் இவற்றை எம்மால் அனுமானிக்கக் கூடியதாகவுள்ளது.

எமது கிராமத்தின் இன்னொரு கல்விப்பாரம்பரியத்தின் (கிறிஸ்தவ) முதற் குறிச்சியாக இவ் "வளவு" பார்க்கப்படுகிறது. இங்கு தாய் பிள்ளைகளான ஜோன் சண்முகம் (உபாத்தியாயர்) தங்கம் தம்பதியினர் கிருஸ்ததாஸ், சத்தியநாதன் என்ற இரண்டு ஆண்பிள்ளைகளையும் க.தா.மாணிக்கம் (தலைமையாசிரியர்) பாக்கியம் தம்பதியினர் நேசமலர், சுகிர்தமலர் (கிளி அக்கா) என்ற இரண்டு பெண்பிள்ளைகளையும் வைரவன் செல்லம் (பெரியாச்சி) தம்பதியினர் கணபதிப்பிள்ளை இராசையா என்ற இரண்டு ஆண்பிள்ளைகளையும் முத்துப்பிள்ளை (திருமதி பொன்னையா), சரஸ்வதி, பறுபதம் (திருமதி மயிலு) ஆகிய மூன்று பெண் பிள்ளைகளையும் பெற்றெடுத்து இவ்வளவிலே சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார்கள்.

இன்று இவர்கள் எவருமே எம்முடன் இல்லை என்றாலும் இவர்களின் வழித் தோன்றல்கள் இவ்விடத்திலேயே வாழ்ந்து வருகிறார்கள் என்பது சிறப்புக்குரியதாகும். அமரர்களான கணபதிப் பிள்ளை மரகதம் தம்பதிகளின் மூன்று பெண் பிள்ளைகளும், அமரர்களான அருமைலிங்கம் சுகிர்தமலர் தம்பதிகளின் இரண்டு பெண் பிள்ளைகளும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களோடு அமரரான ஜோ.ச.சத்தியநாதன் அவர்களின் மனைவி அன்னலட்சுமி (கணபதிப் பிள்ளையின் மூத்தமகள்), மகன் சத்தியராஜன் குடும்பத்தினரும் வாழ்ந்து வருகின்றனர். அமரர்களான கிருஸ்ணதாஸ் நேசமலர் தம்பதிகளின் ஏக புதல்வன் நேசராஜன் இளவயதில் உலகியல் வாழ்வை நிறைவு செய்து கொண்டார் என்பது நினைவு படுத்தப்பட வேண்டியதொன்றாகும்.



வவுனியா பல்கலைக்கழக தகவல் தொழில் நுட்பம் விஞ்ஞானமானி கற்கை நெறியைப் பயில்வதற்கு பாக்கியநாதன் லோஜிதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



அவுஸ்திரேலிய Torrents Univer sity இல் Master in Public Health (advanced) முது மாணிப்பட்டத்தை எமது ஊரைச் சேர்ந்த வைத்தியர் திருமதி சிவகாமி தேவகோட்டா பெற்று ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.



# விக்ரறி கழகமும் பேசப்பட வேண்டிய இரண்டு கரப்பந்தாட்ட ஜாம்பவான்களும்



■ செல்லக்குட்டி கணேசன் ■

எமது கிராமத்தில் இருந்து காலத்துக்குக் காலம் கல்வி கலை (நாடகம்), இலக்கியம், விளை யாட்டு என்பவற்றிற்கூடாக சிலர் பேசப்படக் கூடியவர் களாக வெளியே வந்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் கிராம மட்டத்திலே பேசப்படுபவர்களாக இருந்திருக் கிறார்கள், இருக்கிறார்கள். இன்னும் ஒரு சிலர் கிராமத் திற்கு வெளியே நாடு தழுவிய ரீதியில் பேசப்படக் கூடியவர்களாக இருந்திருக்கிறார்கள்; இருக்கிறார்கள். அவர்களில் இருவர்தான் கரப்பந்தாட்ட ஜாம்பவான்கள் என அறியப்பட்ட செ.சீனித்தம்பி வே.விஜயலிங்கம் (சோமு) ஆவர். இவர்கள் இருவரும் தந்தை வழி சகோதரர்கள். முன்னவர் சீ.இராசநாயகம், சீ.செல்வ நாயகம், திருமதி ஜெயஸ்ரீ செல்வநேசன் ஆகியோரின் தந்தையாவார். மற்றவர் திருமதி விஜயவேணி குகதாசன், வி.விஜயநாதன், அமரரான திருமதி விஜயலட்சுமி சிவராசா, வி.விஜயராசா, வி.விஜயசோதி ஆகியோரின் தந்தையாவார்.

பாடசாலைக் கல்வியை தங்கள் அளவோடு நிறுத்திக் கொண்டவர்கள் சுயதொழில் முயற்சியி னூடாக வாழ்வாதாரத்திற்கான வருமானத்தைப் பெற்று வாழும் காலத்திலேயே தங்களின் கவனத்தை விளை யாட்டிலும் செலுத்தத் தொடங்கினார்கள். அவ்வாறு விளையாடும் காலத்தில் தங்களின் திறமையை முழுவது மாக வெளிப்படுத்தினார்கள். இதனால் இவர்கள் மீதான பார்வை எல்லாக் கிராமங்களிலும் பேசப்பட்டுக் கொண்டிருந்தது. எமது கழகத்தின் (மனோகரா) முன்னணி வீரர்களாக இருந்த இவர்களின் திறமையை பலரும் காலத்துக்கு காலம் கூறக் கேள்விப்பட்டி ருக்கிறோம். அவ்வாறு அண்மையில் ஒரு நாள் வதிரி ஐம்மூலை குறிச்சியைச் சேர்ந்த சி.க.லோகநாதன்(ஆசி ரியர்) அவர்களை அவரது வீட்டில் சந்தித்த போது விக்ரறி (Victory) கழகத்தின் தோற்றம் சீனி அண்ணன் (சீனித்தம்பி), சோமு அண்ணன் (விஜய லிங்கம்) ஆகியோரின் பங்களிப்பும், பற்றி வாய்மொழி யாக சொன்னவற்றை இங்கு பதிவு செய்து கொள்கிறேன்.

1950களின் முற்கூறில் என்று நினைக்கிறேன். இந்நாட்டின் சகல பகுதிகளும் ஒரே மொழியால் ஆளப்பட்டு வந்தது. ஆங்கிலமே ஆட்சி மொழி, நிர்வாக மொழி, அதுமட்டுமல்லாமல் இனங்களுக்கிடையே யான ஊடாட்ட மொழியாகவும் இருந்து வந்துள்ளது. இக்காலப்பகுதியில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கரப்பந்தாட்டம் (Over Game) பிரபல்யமாக இருந்து வந்துள்ளது. அரசாங்க அதிபர் (G.A) ஊடாக நடாத்தப் பட்ட அகில இலங்கை வெற்றிக் கேடயத்திற்காக (all Ceylon Champion) மாகாணங்களுக்கிடையில் நடாத்தப் பட்ட சுற்றுப் போட்டியில் கரவெட்டி கலட்டியைச் சேர்ந்த விக்ரறி (Victory) விளையாட்டுக்கழகமும் பங்கு பற்றியது. இச்சுற்றுப் போட்டியானது யாழ்ப்பாணம் கச்சேரி மைதானத்தில் அரச அதிபரால் (G.A) நடாத்தப் பட்டது. இவ்விவரணமானது விக்ரறி கழகத்தின் தோற்ற மும் அதில் விளையாடிய வீரர்கள் பற்றியதுமே ஆகும். இக்கழகத்திற்காக மனோகராவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் செ.சீனித்தம்பி, வே.விஜய லிங்கம் ஆகியோராவர்.

இக்கழகத்தை தோற்றுவித்தவர் கரவெட்டி கலட்டி "கமலவாசம்" என்ற இல்லத்தில் வாழ்ந்து வந்தவரான அதிபர் அமரர் நீ.சுப்ரமணியம் ஆவார். (இவர் யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரியில் கல்வி கற்பித்த பொன்னக்கா ரீச்சரின் கணவர் ஆவார்) இவருடன் முன்னின்று இக்கழகத் திற்காக உழைத்தவர்கள் எமதூரைச் சேர்ந்த கவிஞர் மு.செல்லையா, மற்றும் பெரியவர், குத்தகைக்காரர்



வெற்றியரும் (இவர் ரதிமகால் வெற்றிவேல் ஆசிரியரின் தாய்வழி பேரனாவார்) ஆவார். இம் மூவருடனும் டாக்டர் சி.மாசிலாமணி (மா.மகேஸ்வரனின் தந்தை), அ.துரைச்சாமி (சி.க.லோகநாதனின் சகோதரியின் கணவர்) ஆகியோரும் இக் குழுவினருடன் இணைந்து செயற்பட்டார்கள்.

அக்காலத்தில் கரவெட்டி கலட்டிப் பகுதி கரப் பந்தாட்டத்திற்கு மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது. இங்கே இரண்டு மிகச் சிறந்த வீரர்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தார்கள். ஒருவர் சி.க.இராசையா. மற்றவர் பெ.அண்ணாசாமி ஆசிரியர். இவ்விருவர்களோடும் மேற்குறிப்பிட்ட அமைப்பாளர்கள் நான்கு வீரர்களை தெரிவு செய்தார்கள். அவ்வாறு தேர்வு செய்யப் பட்டவர்களில் இருவர் தான் மனோகராக் கழகத்தைச் சேர்ந்த சீனி அண்ணரும், சோமு அண்ணரும் ஆவார்கள். இவர்களுடன் மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்த கந்தசாமி, சிவ சிதம்பரம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். இவ் அறுவரும் சேர்ந்து இயங்கிய (இயக்கிய) கழகமே விக்ரறி (Victory) கழகமாகும். குறிப்பிட்ட ஆறு வீரர்களும் தனித் திறமை வாய்ந்தவர்கள்.

வடமாகாணத்தில் மிகவும் பலம் வாய்ந்த "உடுவில் ஸ்ரார்" வல்வெட்டித்துறை டைனமோஸ், அல்வாய் நண்பர்கள் போன்ற புகழ் பெற்ற விளையாட்டுக் கழகங்களை வெற்றி கொண்டு வடமாகாணத்தின் வெற்றிக் கழகமாக (Champions) கொழும்பில் நடாத்தப்பட்ட மாகாணங்களுக்கான அகில இலங்கை கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டது. இப் போட்டியில் அனைத்து மாகாண கழகங்களையும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு இக்கழகம் தெரிவானது. இப்போட்டியில் இலங்கையில் மிகவும் புகழ் பெற்ற கரப்பந்தாட்டக் கழகமாகிய "கம்பஹா" கழகத்துடன் விளையாடி வெற்றி வாய்ப்பை தவற விட்டனர். "கம்பஹா" அணி சம்பியனானது. இப் போட்டியை தனது சகோதரன் சி.க.இராசையாவுடன் பன்னிரண்டு வயதாக இருக்கும் போது (தட்டி வானில்) சென்று பார்த்ததாக தனது நேரடி அனுபவத்தை சி.க.லோகநாதன் அவர்கள் தெரிவித்தார்.

"தம்பி கணேஸ் உங்களால் வெளியிடப்படுகின்ற "நாங்கள்" பத்திரிகையை தொடர்ந்து நானும் செ.சபாநாயகமும் படிக்கிறோம் அருமையான விடயம். அவற்றில் சீனி அண்ணன், சோமு அண்ணன் ஆகியோரின் கரப்பந்தாட்ட திறன் பற்றி நீங்கள் பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்" என்றார்.

சீனி, சோமு இருவரும் வாலிபப்பருவத்தின் சகல விதமான சுகங்களையும் கொண்டவர்களானாலும் தமது தொழில் முயற்சியில் சிறிதும் தயக்கம் கொண்டவர்களாக இருக்கவில்லை. இருவருமே விக்ரறி (Victory) கரப்பந்தாட்டக்குழுவின் முதுகெலும்பாகத் திகழ்ந்தவர்கள். 1968ம் ஆண்டுகட்கு முன்பு காணப்பட்ட கரப்பந்தாட்டத் தரம் இப்பொழுது இல்லை. இருவரும் கரப்பந்தாட்டம் (Over Game) விளையாடுவதில் சூரப்புலிகளாக இருந்தாலும் தமக்குள்ளே வேறுபட்ட அணுகுமுறையை பின்பற்றி விளையாடியவர்கள். சீனி அண்ணன் உருவத்திலே சிறியவராக இருந்தாலும் அவருடைய விளையாட்டில் ஒரு லட்சணம் இருந்தது. நீண்ட நேரம் பந்தை பரிமாறினாலும் வலை (Net) க்கு ஒன்று இரண்டு அங்குலத்திற்கு மேலாக பந்தை அனுப்பமாட்டார். அவ்வளவு நிதானம். இதனை electrifying game என்று சொன்னால் அது மிகையான கூற்று அல்ல. சீனி அண்ணனின் விளையாட்டில் இருந்து முற்றிலும் மாறுபட்டது சோமு அண்ணனின் விளையாட்டு முறையாகும். சோமு அண்ணனின் விளையாட்டில் ஆக்ரோஷம் நிறையவே காணப்படும். எதிரணியினர் விளையாட்டை அவதானித்து விரைவிலே உஷாராகிவிடுவார். இதன் காரணமாக அவருடைய ஒவ்வொரு அடியும் மிகவும் கனதியானதாக இருக்கும். இவர்கள் இருவரும் தங்கள் தொழில் முயற்சிகளை நிறைவு செய்து கொண்டு நாளாந்தம் மாலை வேளைகளில் "கலட்டி"க்கு வந்து தமது பயிற்சிகளை மேற்கொள்வார்கள்.

"இன்றைய இளம் தலை முறையினர் இவ்வாறான திறமை வாய்ந்தவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும். அவ்வாறானவர்களை வெளியே கொண்டு வரவேண்டும். இதனை அல்வாய் மனோகரா ஆவணப்பத்திரிகையான "நாங்கள்" மிகச் சிறப்பாக செய்து வருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார். சி.க.லோகநாதன் ஆசிரியர் அவர்கள்.

(சி.க.லோகநாதன் ஆசிரியரிடம் இருந்து வாய் மொழியாக பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு இந்த கட்டுரை எழுதப்பட்டது)

தமிழ்செல்வன் அனித்தா தம்பதியினருக்கு 2021.6.05 அன்று அஸ்மிந்திகா என்னும் மகள் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.

சுரேந்திரா சோபா தம்பதியினருக்கு 2021.6.14 அன்று ஆருத்ரா என்னும் மகள் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.

சிறுவர் ஆக்கம்

## எனது வகுப்பாசிரியர்

எனது வகுப்பாசிரியரின் பெயர் திருமதி ரம்மியா சுபேந்திரா. அவர் மிகவும் அன்பானவர்.எமக்குக் கல்வி கற்பிப்பதில் மிகச் சிறந்தவர். எம்மைத் தன் இரு கண்களைப் போல காப்பவர். எப்பொழுதும் புன்னகை முகத்துடன் காட்சியளிப்பார். எம்மை அன்பால் மட்டும் கண்டிப்பார். எந்த நிகழ்வுகளுக்கும் எம்மை ஊக்கப்படுத்துவார். எனது ஆசிரியரின் பணி தொடர எல்லாம் வல்ல ஆலடி ஐங்கரனை வேண்டுகிறேன்.

செல்வி விஜய் அனோலா
தரம் 4
யா/வதிரி.வடக்கு மெ.மி.த.க.பாடசாலை



# எமது கழகத்தின் மறைந்த முன்னை நாள் வீரர் அ.சௌந்தரதாசன்

■ வெற்றி துஷ்யந்தன்

எமது கிராமத்தைப் பொறுத்தவரை வீட்டுக்கு வீடு எப்படி கல்வியாளர்களும், அரச பணியாளர்களும் நிறைந்து இருக்கின்றார்களோ, அது போலத்தான் ஒவ்வொரு வீடுகளிலும் விளையாட்டு வீரர்களும் இருந்திருக்கின்றனர் இன்னமும் இருக்கின்றனர். அப்படியான சூழலில் எமது கழகம் சார்ந்த பல்துறை விளையாட்டுக்களிலும் தடம் பதித்தவர்களுள் மறைந்த எமது மனோகரா விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் வீரரே அமரர் அரியகுட்டி சௌந்தரதாசன் அவர்கள். சௌந்தி மாமா என்று சிறியோர் முதல் பெரியோர் வரை செல்லமாக அழைக்கப்படும் சௌந்தி அவர்கள் எமது கழகத்தின் மிகுந்த ஓர்மம் மிக்க விளையாட்டு வீரனாவார். எந்த விளையாட்டானாலும் நாம் தோற்றுவிடக்கூடாது என்பதில் மிகுந்த பற்றுறுதி கொண்டவர்.

05.07.1971 இல் அரியகுட்டி பாக்கியம் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவர் சிறு வயதிலேயே நல்ல உடல் வலிமை மிக்க ஒருவராக இருந்திருக்கின்றார். தேவரையாளி இந்துக் கல்லூரியில் கல்வியைப் பெற்றுக் கொண்டார். இவருக்கு வாழ்க்கைத் துணையாய் நளாயினி அவர்கள் கிடைக்கப் பெற்றார். சந்தீபன், சர்மிகா எனும் இரு பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டு மகிழ்வான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். எமது கழகம் சார்ந்து உதைபந்தாட்டம், மென்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், எல்லே, மெய்வல்லுனர் போட்டிகள் என அநேக விளையாட்டுகளிலும் பங்கெடுத்த ஒருவர் இவராவார். உதைபந்தாட்டத்தில் இவரது பங்களிப்பை பார்த்தால் பின்கள, மத்தியதர விளையாட்டு வீரராக இவர் பல போட்டிகளில் பங்கெடுத்திருக்கின்றார். எமது அணிக்கு சில போட்டிகளில் கோல்காப்பாளராகவும் இருந்திருக்கின்றார். ஆக்கிரோஷமாக விளையாடக்கூடிய திறன் படைத்த இவரின் ஆட்டம் இன்றைக்கும் நினைவுகளில் நிழலாடுகின்றது.

இறுதியாக 2014 இல் வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற நாற்பது வயதிற்கு மேற்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டியில் எமது அணிக்காக விளையாடியமை இன்னமும் நினைவிலிருக்கின்றது. வேகமாக ஓடுவதும், பந்தினை அதிவேகமாக உதைக்கின்ற அவரது வழமையான பாணிகளையும் இப்போட்டியில் தரிசிக்க முடிந்தது.

கிரிக்கெற் போட்டிகளிலும் எமது அணிக்காக பல போட்டிகளில் விளையாடியிருக்கின்ற இவர், எல்லே விளையாட்டிலும் மிக நீண்ட தூரத்திற்கு பந்தினை அடிப்பதில் வல்லவராக இருந்திருக்கின்றார். எது ஊரின் வரலாற்று தடமான நொச்சியடி வெட்டையில் இடம் பெறும் பிக்மச்சுகள் (Big Match) பலவற்றிற்கு நடுவராக இருந்தும், போட்டிகளை முன்னின்று ஏற்பாடு செய்பவராகவும் காணப்பட்டிருக்கின்றார். கிரிக்கெட் போட்டிகளில் விக்கெட் காப்பாளராக அநேக போட்டிகளில் பங்கெடுத்த சௌந்தி அவர்கள் கடினமான பிடிகளை பாய்ந்து பிடிப்பதில் கைதேர்ந்தவராகவும் இருந்திருக்கின்றார்.

கிராமிய சிறு விளையாட்டாக இருக்கும் போளையடித்தல் விளையாட்டிலும் விற்பன்னராக இருந்திருக்கின்றார். அமரர் சௌந்தரதாசன் அவர்கள் பட்டமேற்றுதல், வேட்டைக்கு செல்லல் என அன்றைய நாளின் எமது இளையோரின் பொழுது போக்கு சார் சம்பவிப்புக்களிலும் பங்கேற்றிருக்கின்றார். தண்ணீர் இறைக்கும் மோட்டர்களை பழுது பார்ப்பதில் வல்லவராக விளங்கியதால் எமதூரவர்கள் பலரது தண்ணீர் மோட்டர்களை சிறப்பாக இயங்க வைத்துக் கொடுத்தார். விளையாட்டின் மீது மிகுந்த ஈடுபாடும் அதற்கும் மேலால் எமது மனோகரா விளையாட்டு கழகத்தை நேசித்த எமது முன்னாள் வீரர் அ.சௌந்தரதாசன் இந்த ஆண்டு தனது 50 ஆவது அகவையை காணும் ஆண்டாக இருக்கின்றது. 20.01.2018 எம்மை விட்டுப் பிரிந்த இப்படியான ஒரு வீரனின் பிரிவு என்பது ஏற்றுக்கொள்ள முடியாததுவே. நல்லதொரு குடும்பத்தலைவனாய் பிள்ளைகளுக்கு நல்ல அப்பாவாய் ஊரின் அபிமானியாய் ஊர்ப்பற்றுடன் வாழ்ந்த அமரர் அ.சௌந்தரதாசன் என்றும் எம் கழக வரலாற்றில் நிலை பெறுவார்.

# திரு க.கதிர்காமு அவர்களின் ஆலடியான் மீதான நம்பிக்கை



■ கலாநிதி. த.கலாமணி

எமது ஆலடிப்பிள்ளையார் கோயிலின் வளர்ச்சி நீண்ட கால இடைவெளியில் கட்டம் கட்டமாகவே இடம் பெற்று வந்தது. ஆரம்ப கால வளர்ச்சிப்படிநிலைகளில் ஆலய கட்டட நிர்மாணப் பணிகள் துரிதமாக நடைபெற முடியவில்லை. இதற்குக் காரணம் எமது ஊரவரின் உழைப்பும் வசதிகளும் வரையறுக்கப்பட்டவையாக இருந்தமையே. எமது ஊர் மக்கள் எல்லோருக்கும் சம உரித்து உடையதாக ஆலடிப்பிள்ளையார் கோயில் விளங்க வேண்டும் என்பதே பரிபாலன சபையின் முக்கிய நோக்கமாக எப்போதும் இருந்து வந்திருக்கின்றது. இதனால் ஆலயப்பணிகளுக்கும் பூஜைகளுக்குமான நிதியானது ஆலய உறுப்பினர்கள் ஒவ்வொருவராலும் பங்களிப்புச் செய்யக் கூடிய தொகைப்பணங்களாகவே பொதுச் சபையால் தீர்மானிக்கப் பட்டது. இவ்வாறான "சமவீத" பங்களிப்பு எமது ஆலயத்தை எவரும் "தனியுரிமை" கொண்டாட முடியாத நிலைமையைப் பேணுவதற்கான அடி ஆதாரமாக இருப்பதும் எமது ஊருக்குப்பெருமை சேர்ப்பதே.

இவ்வாறான ஒரு பின்னணியிலேயே எமது ஆலய வளர்ச்சிக் கட்டங்களை நாம் நோக்க வேண்டும். 1960களில் ஆலயத்தின் கட்டட நிர்மாண வேலைகளை விரிவாக்கம் செய்ய வேண்டிய நிலையில் எமது ஆலயத்தின் பெருமைக்குரிய விருட்சமான ஆலமரத்தை அகற்ற வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டபோது, நிதிநிலைமையை உத்தேசித்து, செலவின்றி சிரமதானப் பணியாக மேற்கொள்ளலாம் என்ற ஆலோசனை பொதுச் சபையில் சொல்லப்பட்டது. ஆலமரத்தைத் தறிப்பதற்கு எவரும் முன்வர வில்லை. ஆலயத்தின் தொன்மையான, பாரிய ஆலமரத்தைத் தறிப்பது என்பது ஒரு பெரிய வேலை தான். ஆனால், அண்ணமாரும் காளியும் இந்த ஆலமரத்திலேயே உறைகின்றார்கள் என்ற ஒரு நம்பிக்கை எமது மக்களிடத்தில் இருந்ததனால் "ஆலமரத்தைத் தறித்தால் அண்ணமாரும் காளியும் பழிவாங்கிவிடுவார்கள்" என்ற அச்சத்தை மீறி, அவர்களால் முன்வர முடியவில்லை. பொதுச்சபைக் கூட்டத்தில் நிலவிய மௌனத்தை "சின்னப்பாதி"யைச் சேர்ந்த திரு க.கதிர்காமு அவர்கள் கலைத்தார். "ஆலடியானுக்காக நான் இந்த ஆலமரத்தை தறிக்க முன்வருகிறேன்" என்று ஒப்புதல் தெரிவித்தார். பலருக்கும் ஆச்சரியமாகப் போய்விட்டது. நல்ல உடற்கட்டு கொண்டவர் அவர் என்றாலும் தெய்வக்குற்றம் பற்றி அவருக்குப் பயம் இல்லையா என்று வியந்தனர். திரு கதிர்காமு அவர்களுக்கும் பயம் இல்லாமல் இல்லை. ஆனால் ஆலடியானின் விரிவாக்கப் பணியில், ஆலைத்தறிப்பதனால் தெய்வக்குற்றம் ஏதும் வந்துவிடாது என்று நம்பினார். ஆனாலும், ஆலடியானிடமே விடை கேட்போம் எனத் தீர்மானித்து, எவரும் இல்லாத ஓர் அதிகாலைப் பொழுதில் பாலகணபதி விக்கிரகம் வைக்கப்பட்டிருந்த "பால ஆலயத்தின்" முன்னால் நின்று மெய்யுருக வணங்கி "ஆலடியானே நீ தான் எனக்கு விடை தர வேண்டும்" என்று கேட்டு, அழுதார். என்ன அதிசயம்! அப்போது, காற்று பலமாக வீசியதில் பால ஆலயக் கதவு சடசடத்தது. உடனடியாகவே கதவின் இரு சிறகுகளும் திறந்து கொண்டன. முதல் இரவு ஏற்றிய விளக்குத்திரி சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்க, "பாலகணபதி" தனது அருட்பார்வையை செலுத்திக் கொண்டிருந்தார். கதிர்காமு அவர்கள் அக்காட்சியைக் கண்டு "ஆலடியானே" என்று வாய்விட்டு அரற்றினார். நிலத்தில் விழுந்து புரண்டார். தனக்கு ஆலடியான் காட்சி தந்ததில் அவருக்குப் பெருமகிழ்ச்சி. உறுதியான தீர்மானத்தை எடுத்துக் கொண்டார். அங்கிருந்து நேராக என் தந்தையிடம் வந்தவர் நிகழ்ந்த சம்பவத்தைச் சொல்லி, "தராங்கு சரியாகப் பூட்டாததால் பலத்த காற்றுக்குக் கதவு திறந்தது என்று பகிடி பண்ணுவினமோ தெரியாது; அது தான் உன்னட்டை சொல்லுறன் தம்பி" என்று கூறினார். என் ஐயா நெகிழ்ந்து போனார். "அண்ணை, உண்மையிலை இது ஆலடியானின் அற்புதம் தான். நீங்கள் ஒன்றுக்கும் யோசியாமல் வேலையைத் தொடங்குங்கோ" என்று உற்சாகப்படுத்தினார். அற்புதம் தான் என்று ஐயா சொல்லியதில் மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. அப்போது, அவர் சிரித்த சிரிப்பு இப்போதும் எனக்குக் கண்ணில் நிற்கிறது. இந்த சம்பவத்தின் தாற்பரியம் அப்போது எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. ஆனால், இப்போது நினைத்துப் பார்க்கிறபோது உடல் புல்லரிக்கிறது. எவ்வித இடையூறும் நேராமலே ஆல் தறிக்கப்பட்டது. எமது ஆலயத்தைப் பொறுத்தவரை எமது ஊரவர்கள் என்றும் திரு கதிர்காமு அவர்களுக்குக் கடமைப்பட்டவர்கள். கதிர்காமுப் பெரியையா அவர்களுக்கு நம்பிக்கை யூட்டிய ஆலடியானின் அற்புதம் பதிவு செய்யப்பட வேண்டியது.

## அது ஒரு காலம் – 5

# எழுபதுகளுக்கு முன்னர் நாங்களும் எமது விளையாட்டு அணிகளும்

■ செல்லக்குட்டி கணேசன் ■

நேற்றுப் போல இருக்கிறது. இன்னும் அந்த நினைவுகள் பசுமையாக உள்ளது. ஐம்பது வருடங்கள் கடந்தும் எம் வயதை ஒத்தவர்கள் எந்த நிகழ்வுகளில் சந்தித்துக் கொண்டாலும் எமது சிறுபராயத்து நிகழ்வு களை மீட்டுப்பார்க்காமல் இருந்ததே இல்லை. இன்று நேற்று அல்ல காலத்துக்குக் காலம் ஏதோவொரு அடிப்படையில் எமது கிராமத்தில் உள்ள சிறுவர்கள், இளைஞர்கள் விளையாடுவதற்காக குழுக்களாக ஒன்று சேர்ந்து கொள்வார்கள். அவ்வாறு எமது சிறு பராயத் திலே (70பதுக்கு முன்னர்) உதைபந்து விளையாடுவதற் காக ஒன்று சேர்ந்த குழுக்களிலே பிரதான குழுக்களாக மூன்று குழுக்கள் இருந்தன. அவையாவன "யங் லயன்ஸ்", "சுபாஸ்", "பச்சிலஸ்" ஆகும். இவை குறிச்சி களை அடிப்படையாகவும் விளையாடுகின்ற "வெட்டை"யை அடிப்படையாகவும் கொண்டு தோற்றம் பெற்றவை ஆகும்.

பிச்சந்தோட்டம், வடலித்தோட்டம், மூன்றாம் பனையடி குறிச்சியைச் சேர்ந்தவர்கள் "யங்லயன்ஸ்" எனவும் புதுவீடு, புளியடி குறிச்சியைச் சேர்ந்தவர்கள் "சுபாஸ்" எனவும், மயிலிட்டு பொருக்கர்பாதி குறிச்சியைச் சேர்ந்தவர்கள் "பச்சிலஸ்" எனவும் குழுக் களாக விளையாடி வந்தோம். இவற்றில் இருந்து விடுபட்ட குறிச்சியைச் சேர்ந்த சிறுவர்கள் தாங்கள் விரும்பிய குழுவில் இணைந்து கொள்வார்கள் அல்லது இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இக்குழுக்களின் பின்னணியில் அந்தந்த குறிச்சியைச் சேர்ந்த ஒரு சில பெரியவர்கள் செல்வாக்குச் செலுத்தியிருந்ததையும் மறுதலிக்க முடியாது.

மூன்று அணிகளுக்குமிடையே கடுமையான போட்டி நிலவும். அந்தந்த குறிச்சியைச் சேர்ந்த பெரி யோர்கள், பெற்றோர்கள் தங்கள் தங்களின் குழுக் களுக்கு உற்சாக மூட்டுவார்கள். போட்டிக்கான நாளை யும், வெட்டையையும், போட்டியிடும் அணிகளின் பெயர்களையும் சிறு பிரசுரம் மூலம் விளம்பரப்படுத்து வோம். இதற்காக கொப்பி (அப்பியாசக் கொப்பி) ஒற்றைகளைப் பயன்படுத்துவோம். பிரசுரங்களை ஒட்டு வதற்கு ஒதியமர பிசின், கோதுமை (கூப்பன்) மாவைப் பயன்படுத்துவோம். இவை கிடைக் காத விடத்து அரிசி சோற்றை அம்மியில் வைத்து அரைத்து பசையாக்கி ஒட்டுவோம். பிரசுரங்கள் ஒட்டும் இடங்களாக பனைகள், சிலரின் வீட்டு தகரப் படலைகளை பயன்படுத்துவோம்.

இப்போட்டிகள் யாவும் நொச்சியடி வெட்டை, உலக்கந்தோட்டம் வெட்டை, உதிரையடி வெட்டை களில் இடம் பெறும். "பச்சிலஸ்" அணிக்கு கணபதிப் பிள்ளை விநாயகராசா, சரவணை கருணாகரன் ஆகியோர் முன்னின்று செயற்படுவர். அதேபோன்று "சுபாஸ்" அணிக்கு வீரசிங்கம் செல்வநாதன், கிருஸ்ணபிள்ளை விக்னேஸ்வரன், பாலசிங்கம் மணிவண்ணன் ஆகியோர் முன்னிற்பர். "யங்லயன்ஸ்" கழகத் தலைவராக சீனித்தம்பி செல்வநாயகம் இருந்து அணியை வழி நடாத்திச் செல்வார். அவரின் வழி நடத்தலில் இளையவர்களாகிய நாம் விளையாடுவோம். இவருக்கு துணையாக சின்னத்தம்பி செல்வரத்தினம்(யோகநாதன்), சண்முகம் ஜெயானந்தன் (டுபாய்நாதன்), ஆகியோர் செயற் பட்டனர். விளையாட்டு அணியின் தலைவராக, நான் (செ.க), நடேசு செல்வரத்தினம் (அரி), சின்னத்தம்பி செல்வநாதன் ஆகியோரை கழகத் தலைவர் ஒவ்வொரு போட்டிக்கும் ஒவ்வொருவரை தெரிவு செய்து கொள் வார். அவரே எங்களுக்கு விளையாட்டு பயிற்றுனராகவும் இருந்து செயற்பட்டார். இவர்களுக்கு அப்பால் கந்தையா பரமானந்தன் அவர்களின் ஆலோசனைகளும் அறிவுறுத்தல் களும் எமது அணிக்கு நல்ல உற்சாகத்தைத் தந்தன. அது மட்டுமல்லாமல் நல்ல முற்போக்கு கருத்துக்களை எமது சிந்தனையை தூண்டக் கூடிய வகையிலே எடுத்தியம்பு வார். அவரின் கருத்துக்களால் உத்வேகம் கொண்டவர் களில் நானும்(செ.க) கந்தையா சயானந்தனும்(தயா) இன்றும் எம்மவர்களால்பேசப்படக்கூடியவர்களாக இருக்கின்றோம்.

எமது விளையாட்டு (யங்லயன்ஸ்) அணியானது எமது கிராமத்துடன் நின்று விடவில்லை. வதிரி "பஞ்" குழுவினருடனும், வதிரி "முரண்டன்ஸ்" குழுவினருட னும் உதைபந்தாட்டம் விளையாடி வந்தோம். எமக்கான வெட்டையாக நொச்சியடி வெட்டையும், "பஞ்" குழுவுக்கு செவ்வாத்தை மைதானமும், "முரண்டன்ஸ்" குழுவுக்கு முரண்டன் வடலி வெட்டையும் களமா யிருந்தன. "பஞ்" குழுவுக்கு அப்பாக்குட்டி பொன்ராஜன், தினகரம்பிள்ளை அன்பழகன், ஆழ்வாப்பிள்ளை பரமநாதன் ஆகியோரும் "முரண்டன்ஸ்"க்கு சின்னையா யோகராசா (அன்னகம்), சீனியர் சிவச்செல்வன் ஆகி யோரும் முன்னின்றனர். இவர்களுடனான விளையாட்டு ஒழுங்கை நாங்கள் பாடசாலையிலேயே பேசிக் கொள்வோம். விடுமுறை நாட்கள் என்றால் அவர்களது வீடுகளுக்கு சென்று ஒழுங்கு செய்வோம். சிலவேளை விளையாடுபவர்கள் சேரும் வரை அவர்களுடன் நின்று அழைத்து வருவோம். எங்களுக்கு ஒரு பழக்கம் இருந்தது. "வெற்றி பெறும் வரை விளையாடுதல்" ஒரு முறை அவ் அணியினர் வெற்றியீட்டினால் உடனடியாகவே அடுத்தநாள் விளையாட ஒழுங்கு செய்வோம். தோற்று விட்டால் திரும்பவும் விளையாட ஒழுங்கு செய்வோம். போட்டியானது ஒரு நாள் எமது வெட்டையில் நடந்தால் மறுநாள் எதிரணி மைதானத்தில் இடம்பெறும். இவ்வாறு எமது சிறுபராயத்துக் காலம் படிப்பும் விளையாட்டுமாக அமைந்திருந்தது. ●



திரு சி.திருஞானசம்பந்தன் B.BA(Hons) MBA (சிரேஷ்ட விரிவுரையாளர்) அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் வியாபார கற்கைகள் பீடத்தின் செயற்திட்ட முகாமைத்துவ துறையின் தலைவராக பதவி உயர்வை பெற்று எமது ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார்.

எமதூர்க் கோயில்கள் - 3

# வன்னியத் தெய்வம்

க.பரணீதரன்





சிறுதெய்வ வழிபாடு எம்முன்னோர்களால் மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளமையை நாம் அறிவோம். அந்த வகையில் கல், மரம், சூலம், புற்று போன்றவற்றை இறைவனாக உருவகித்து நம் மூதாதையர்கள் வழிபாடு செய்து வந்துள்ளார்கள். குறித்த கல், மரம், சூலம், புற்று என்பவற்றிற்கு தண்ணீர் ஊற்றி, மலர் சாத்தி-தூவி கற்பூரம் ஏற்றி சாதாரண மான பூசை முறைகளை கையாண்டு நம்பிக்கையோடு தம்மைக் காக்கும் தெய்வமாக எண்ணி வாழ்ந்தார்கள். காலப் போக்கில் சில சிறு தெய்வங்கள் இருந்த இடத்தில் சிறு கட்டடங்கள் அமைக்கப்பெற்று அங்கே அவற்றை புனருத்தாரணம் செய்து வழிபாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறான தொரு கட்டுக்காவல் இல்லாத காக்கும் தெய்வமாக குணரத்தினம் (துயா) அவர்களின் வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள சிறு கோயில் தான் வன்னியத் தெய்வம் ஆலயம். இந்த ஆலயத்தை குணரத்தினம் அவர்களின் தாயார், சின்னத்தம்பி அப்பையா 1920 களில் இருந்து ஆதரித்து வந்தார். இடைக்காலத்தில் கவனமற்று கிடந்த இந்த ஆலயத்தின் இறை சக்தி, மகன் குணரட்ணம் அவர்களது கனவில் காட்சி கொடுத்து "எனக்கு பொங்கல் பொங்கி படைத்து வழிபடு" என கூறியுள்ளார். அதன்படி வீட்டின் அருகில் உள்ள வேப்ப மரத்தின் கீழ் குறித்த தெய்வமாக உருவகிக்கப்படும் கல்லை கற்பூரம் ஏற்றி வழிபடத் தொடங்கினார்கள். இந்த தெய்வம் ஓர் ஆண் தெய்வம் என்கிறார் குணரத்தினம் அவர்கள். மாட்டு உருவம் கொண்ட உருவமாகவும் நம்பி யோருக்கு காட்சி கொடுக்கும் தெய்வமாகவும் இது காணப்படுவ தாக தெரிவிக் கின்றார் குணரத்தினம். வைகாசி மாதத்தில் அன்னதானம் கொடுத்தும், இடையிடையே பொங்கல்பொங்கி இந்த ஆலயத்தில் நிகழ்வுகள் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2018 ஆம் ஆண்டு சிறு கட்டடம் அமைத்து இந்த ஆலயம் வளர்ச்சி கண்டுள்ளமையும் குறிப்பிடத்தகுந்தது.

எமதூர்க் கிணறு - 4

# அரசப்பு கிணறு

க.பரணீதரன்





எமதூரின் கிணறுகள் சார்ந்த சிறு பதிவுகளை "நாங்கள்" பத்திரிகை மூலம் பதிவிட்டு வருகின்றோம். அந்த வகையில் கொக்கட்டியாவளவு சந்தியில் அரசப்பு கிணறு அமைந்துள்ளது. சோதிடர் ச.தம்பிஐயா அவர்கள் இடம் எடுத்துக் கொடுக்க 10.06.1969 ஆம் ஆண்டு இரவு 7 மணியளவில் தம்பு திருநாவுக்கரசு அவர்களால் அத்திவாரம் போடப்பட்டது. பழம் பெரும் கிணறாகிய இயவராந்தோட்டக் கிணறு குறித்த பகுதியை சேர்ந்தவர்களது அதிக பாவனைக்குரிய கிணறாக இருந்தது. இன்னுமோர் கிணறு அமைந்தால் மக்களது பாவனைக்கு இலகுவாக அமையும் என்னும் நோக்குடன் இந்த கிணறு வெட்டப்பட்டது. அத்துடன் தம்பு திருநாவுக்கரசு(அரசப்பு) அவர்களது கிணறு வெட்ட வேண்டும் என்ற ஆசையும் இக்கிணற்றின் தோற்றத்திற்கு வித்திட்டது. கிணற்றை வெட்டிக்கொண்டு செல்லும் போது பொருளாதாரக் கஷ்டம் ஏற்பட்டது. ஆனால் உறவுகளின் கைகொடுப்புடன் தொடர்ந்து கிணற்றை வெட்டினார்கள். அத்துடன் அல்வாய் கிராமசபையின் (Village council)சிறு உதவியும் கிடைக்கப்பெற்று இக்கிணறு 24.10.1972 இல் மக்கள் பாவனைக்குரிய கிணறாக ஆக்கப்பெற்றது. இப்பகுதி மக்கள் இந்த கிணற்று நீரை தமது அனைத்து தேவைக்கும் உரிய வகையில் பயன்படுத்திக் கொண்டார்கள். அரசப்பு அவர்களின் சிந்தனையால் அவரது முயற்சியால் இக்கிணறு உருவாக்கம் பெற்றதால் "அரசப்பு" கிணறு என இன்று வரை அழைத்து வருகிறார்கள். இக்கிணறு தற்போதும் பாவனையில் உள்ளது. குறித்த சூழலைச் சேர்ந்தவர்கள் கப்பி மூலம் நீரை அள்ளி வந்தார்கள். தற்போது மின்சார மோட்டர்கள் பயன்படுத்தி நீரைப் பெற்றுக் கொள்கிறார்கள். தற்போது இக்கிணற்றை திருநாவுக்கரசு செல்வநாதன் அவர்கள் சிறப்புற பராமரித்து வருகின்றார்.

(தி.செல்வநாதன் அவர்களது வாய்மொழி வரலாறு மூலம் பெறப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு இப்பதிவு எழுதப்பட்டுள்ளது)



# நாடக ஆளுமை அரங்கிசைவாணர் இராசன் சிவபாதம்

■ க.பரணீதரன்

வடமராட்சி பகுதியில் அல்வாய் மனோகராக் கிராமம் தனித்துவமான கலைஞர்கள் பலரைக் கொண்ட கலைப் பாரம்பரியம்மிக்க கிராமமாக விளங்கி வருகின்றது. இக்கிராமத்தின் நாடக வளர்ச்சிக்கு என்றுமே உறுதுணையாக அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளை யார் ஆலயம் விளங்கி வருகின்றது. அதிலும் சிவராத்திரி தினம் நாடகக் கலைஞர்களுக்கு கிடைத்த அற்புத நாளாகக் கொள்ளக் கூடியது. எமது கிராமத்து கலைஞர்கள் அனைவருக்கும் கொண்டாட்டத்திற்கும் மகிழ்வுக்கும் உரிய நாளாக சிவராத்திரி தினம் விளங்கி வருகின்றது. சிவராத்திரி நாடகங்கள் ஊடாகவே இ.சிவபாதம் அவர்களை நான் அறிந்தேன். இவரது பல நாடகங்களை பார்த்திருக்கின்றேன். இச்சிறு கட்டுரை இ.சிவபாதம் அவர்களது நாடக ஈடுபாடு பற்றியதாக அமைகின்றது.

இராசன் வள்ளிப்பிள்ளை தம்பதிகளுக்கு 1940.06.07 சிவபாதம் அவர்கள் மகனாகப் பிறந்தார். இவருக்கு தங்கமயில், கமலவேணி, இராசமணி, இராசரட்ணம் என நான்கு சகோதரங்கள் கிடைக்கப் பெற்றனர். இவர்களில் தங்கமயில் சிறு வயதிலேயே இறையடி சேர்ந்தார். தாயை சிறு வயதில் இழந்து விட்ட இவர், தனது மூன்று பெண் சகோதரிகளையும் கண்ணும் கருத்துமாக கவனத்துடன் வளர்த்து திருமணம் முடித்துக் கொடுத்து தன் கடமையை சரி வரச் செய்தார். ஆரம்ப கல்வியுடன் தன் படிப்பை நிறுத்திக் கொண்ட இவர் பல சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு தன் சொந்த உழைப்பில் வாழ்ந்து வந்தார். இவருக்கு மனைவியாக செல்வராணி வாய்க்கப் பெற்றார். அதன் பேறாக இவர் இனிய இல்லறம் மேற் கொண்டு செல்வ ரஞ்றனி, கண்ணதாசன், வாசுகி, பாரதி தாசன், சண்முகதாசன், வள்ளிமயில், மங்கையர்கரசி, மணிமேகலை, தங்க மயில் என 9 பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டார். முருக பக்தரான இவர் கதிர்காமக் கந்தனை வழிபட பல தடவை கதிர்காம யாத்திரை சென்று வந்தார். சிறுவயது முதலே இவரிடம் வாசிப்பு, நாடக ஈடுபாடு காணப்பட்டு வந்தது. இவரது நாடக ஈடுபாட்டை அறிந்த சின்னப்பாதி அப்பு அவர்கள் இவரை ஊக்குவித்து இவரது நாடக ஆளுமை வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார். சிறுவயது முதலே நாடகங்கள் நடிக்க தொடங்கிய இவர் ஆரம்ப காலத்தில் ஸ்திரீ பாட்(பெண் வேடங்களை) சிறப்புற ஏற்று நடித்தார். இயல்பில் அழகான மாநிறத்தோற்றம் கொண்ட இவர் பெண் பாத்திரத்தில் அழகாகக் காட்சியளித்தார்; அழகான பெண்களை “கிளி” போல அழகி என வர்ணிப்பார்கள், அவ்வாறே இவரும் அழகான கிளி மாதிரி பெண்ணாக காட்சியளித்த காரணத்தால் இவரைப் பலரும் செல்லமாக “கிளி“ என அழைக்க, அதுவே அவரது நாமமுமாக பின்னாளில் மாறி விட்டது.

கவிஞர் மு.செல்லையா, அண்ணாவியார் ச.தம்பிஜயா, கலைப்போதனாச்சுடர் மு.பொன்னையா ஆகியோரின் தொடர்பால் இவரது நடிப்புத்திறன் வெளிக்கொணரப் பட்டது. 1953 ஆம் ஆண்டு “சகோதர பாசம்” என்னும் நாடகத்தையும், பின்னர் “நச்சுக்கோப்பை” என்ற மு.கருணாநிதியின் வசனத்தில் வெளியான நாடகத்தையும் 1956 இல் வதிரி கலாமன்றத்தால் தயாரிக்கப்பட்ட “பாசம்” நாடகத்தையும் நடித்தார். மேலும் “கல்யாணப்பரிசு” போன்ற நாடகங்களில் நடித்தார். இவை சமூக நாடகங்களாக அமைந்தன. ஆனால் இவருக்கு இசை நாடகங்களின் மீதே அதிக ஈடுபாடு காணப்பட்டது. சிறப்பாக பாடக்கூடிய வல்லமை பெற்றவராக இவர் விளங்கியதால் இசை நாடகத்தின்பால் ஈர்ப்புக் கொண்டு மு.விவேகானந்தன், வதிரி மு.சி.கிருஷ்ணபிள்ளை, கலாநிதி த.கலாமணி போன்றோருடன் தொடர்புகளை ஏற்படுத்தி இசை நாடகங்களை நடிக்கலானார். இவரது ஆரம்ப கால நாடகங்களை ம.சி.கிருஷ்ணபிள்ளை அவர்கள் நெறிப்படுத்தினார். பக்த நந்தனார், சத்தியவான் சாவித்திரி, பூதத்தம்பி, காத்தவராயன் கூத்து, அரிச்சந்திரா மயானகாண்டம், வள்ளி திருமணம். பவளக்கொடி, வாலிவதை, கோவலன் கண்ணகி என இசை நாடகங்கள் பலவற்றிலும் இவர் நடித்து பாராட்டுப் பெற்றுள்ளார். குறித்த நாடகங்களில் பெண்பாத்திரங்களையும், ஆண் பாத்திரங்களையும் ஏற்று நடித்துள்ளார். நாடகங்களில் வரும் சோக கட்டங்களை மிக அருமையாக வெளிப்படுத்தக்கூடிய கலைஞராக விளங்கினார். கேள்விஞானத்தினால் தனது சங்கீத அறிவை வளர்த்துக் கொண்ட இவர் சிறப்பான குரல் வளத்தை உடையவராக விளங்கியதால் இசை நாடகப்பாடல்களை இனிமையாக இசைக்கும் வல்லமை பெற்றார். கோயில்களில் நடைபெறும் திருவாசக முற்றோதல், திருமுறை ஓதல், பஜனை போன்ற நிகழ்வுகளிலும் கலந்து பாடல்களை பாடி வந்தார். மேடை நிகழ்ச்சியாக சிவராத்திரி தின நிகழ்சிகள் நடைபெற்ற தருணங்களில் சிவராத்திரி விரதம் இருக்கும் பக்தர்களுக்காக நாடகப்பாடல்களை பாடி அவர்களை மகிழ்வித்து தூங்க விடாது விரதம் அனுஷ்டிக்க உதவினார். கண்ணன் நாடக மன்றத்தை உருவாக்கி சிவராத்திரி தினத்தில் நாடகங்களை மேடையேற்றி வந்தார். வ.இராசரத்தினம்(சி.ப.) இவரது பல நாடகங்களில் இவருடன் நடித்துள்ளார். இவரது மகன் தங்கமயில்(நவராஜ்), மகள் மணிமேகலை போன்றோரும் நாடக ஈடுபாட்டுடன் இன்று செயற்பட்டு வருகிறார்கள். அல்வாய் மனோகர கான நாடக சபா, கவிஞர் நாடக மன்றம், யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் என பல நாடகமன்றங்களுடன் இணைந்து நடித்துள்ள இவர் பெருமை பேசாத அமைதியான கலைஞராக விளங்கினார். இவரது நேர்காணல் ஒன்றில் “ நான் பெருமையாக நினைப்பது காலாவினோதன் எம்.பி. அண்ணாசாமி, அண்ணாவியார் ச. தம்பிஜயா அவர்கள் குழுவில் நடித்து அவரால் பல தடவை பாராட்டப் பெற்றேன். கலாநிதி த.கலாமணியின் பூதத்தம்பியில் நடித்து அவரால் பாராட்டு பெற்றவன் என்பதால் நான் பெருமை கொள்கிறேன்” என்று தெரிவித்திருந்தார். சிறுவயது முதல் தனது இறப்பு வரை எமது கலைப்பாரம்பரியம் அழிந்து விடாது தனது நடிப்பு, நெறியாள்கை மூலம் போராடி வந்த சிவபாதம் அவர்களுக்கு பிரதேச செயலகத்தால் “அரங்கிசைவாணர்”, “கலைப்பரிதி” போன்ற பட்டங்கள் வழங்கி கௌரவம் அளிக்கப்பட்டது. எமது கலைப்பாரம்பரியத்தின் கிளைகளில் ஒருவராக விளங்கிய இ.சிவபாதம் அவர்கள் 01.11.2017 இயற்கை எய்தினார். உடலால் எம்மை விட்ட பிரிந்தா லும் கலைஞன் சுவைஞர்களிடம் இருந்து மறைந்து விடமாட்டான் என்பதற்கமைய பல இசை நாடகச் சுவைஞர்கள் மனதில் இ. சிவபாதம் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**மேலதிக விடயங்கள்...**

**நாங்கள் – 3 : இல் இடம்பெற்ற "நட்சத்திரப்பா" கிணறு தொடர்பானது**

இக்கிணறு பற்றிய பதிவில் இரு முக்கியமான விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

1. இக்கிணறு எமது ஊரிலுள்ள ஒரு பகுதி மக்களுக்குப் பயன்பட்ட வகையில், அப்பயனாளிகளும் கிணற்றின் சொந்தக்காரர்களும் அவர்களின் உறவினர்களும் ஊடாட்டம் கொள்வதற்கான ஓர் இணைப்புப் பாலமாக இருந்து வந்துள்ளது.

2. இக்கிணற்றின் உண்மைப்பெயர் "நட்சத்திரன்" கிணறு ஆகும். பாடசாலைக்காலத்தில் நாங்கள் இதனை நட்சத்திரக் கிணறு என்று சொல்லி வந்தோம். ஒரு சமயம் அந்தக்கிணற்றின் அமைப்பு நட்சத்திர வடிவிலுள்ளதா என்று கூட நாம் பரிசீலித்திருக்கிறோம். ஆனால், கிணற்றை வெட்டியவர் "சம்பூர்ண அரிச்சந்திரா" நாடகத்தில் நட்சத்திரன் பாத்திரத்தில் சிறப்பாக நடித்திருந்தமையால் அவரின் பெயருடன் "நட்சத்திரன்" என்ற அடைமொழியும் சேர்த்தே அவர் அழைக்கப்பட்டார் என்றும், அவர் வெட்டிய கிணறு "நட்சத்திரன் கிணறு" என்றே சுட்டப்பட்டது. அவ்வாறாயின் எமது சமூகத்தினரிடையே வளமான ஒரு கலைமரபு இருந்து வந்துள்ளது என்பதற்கு இக்கிணறு ஒரு சான்று ஆகும்.

- கலாநிதி த.கலாமணி

*நாங்கள் பத்திரிகையின் சந்தாதாரர்களாக இணைந்து கொண்டவர்கள் விபரம்*

| | |
|---|---|
| *1. க.செல்வநேசன்* | *2. மா.கணேசலிங்கம்* |
| *3. செ.யோகதாஸ்* | *4. வே.கணேசவேல்* |
| *5. ந.அரியநாயகம்* | *6. வி.சுந்தரலிங்கம்* |
| *7. செ.அட்ஜெயலிங்கம்* | *8. தி.செல்வநாதன்* |
| *9. நா.ரகு* | *10. வ.பர்வதாமணி* |
| *11. க.கீதாமணி* | *12. க.வரதவேல்* |

*நாங்கள் பத்திரிகையின் உற்பத்தி செலவு நாங்கள் போடும் விலையிலும்(30/-) பார்க்க அதிகமாகும். இதை வெளியீடு செய்யும் ஆசிரியர்களாகிய நாம் இந்த நஷ்டத்தை எமது தலையில் சுமந்து எம்மவர்களுக்காக "நாங்கள்" பத்திரிகையை வெளியீடு செய்கின்றோம். இதில் எந்த சுய இலாபமும் இல்லை என்பதை சத்தியத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். நாங்களுக்கு நீங்கள் சந்தா செலுத்தி கொடுக்கும் ஊக்கம் தொடர்ச்சியான எமது செயற்பாட்டுக்கு ஒரு உந்துதலை அளிக்கும் என்பதுடன் உங்கள் வரவேற்பு எமக்கு உற்சாகமாக செயற்பட உதவும். 12 இதழ்களுக்கான சந்தா பணம் 300/-வெளி நாட்டில் உள்ளவர்கள் தமது சொந்தங்களுக்காக சந்தா செலுத்தி குறித்த வீட்டில் உள்ளவர்களுக்கு கொடுக்க சொன்னால் எம்மால் குறித்த நபர்களிடம் சேர்ப்பிக்க முடியும்.*

# "மாசி"யின் ஜோக்ஸ்

**ஆசிரியர் :**
*கூப்பிட்ட குரலுக்கு யார் வந்தது...*

**பியோன்:**
*நான்தான் சேர்.*

***

**ஆசிரியர் :**
*குருவுக்கு மிஞ்சிய சீடன் என்பதை விளக்குக*

**மாணவன்:**
*எல்லா சீடர்களும் விட்டுக்குப் போன பின் கடைசியாக மிஞ்சி நிற்பவன் தான் குருவுக்கு மிஞ்சிய சீடன்.*

***

**ஒருவன்:**
*காலையிலை என்னடா சாப்பிட்டனி*

**மற்றவன்:**
*புட்டுத்தான் சாப்பிட்டனான்.*

**முதலாமவன்:**
*நான் ஒரு நாளும் புட்டுச் சாப்பிறதில்லை. கிள்ளித்தான் சாப்பிடுறனான்.*

***

**மகன்:**
*அப்பா பட்டம் விடுவம் வாருங்கோ*

**தகப்பன்:**
*காற்று இல்லைத்தம்பி கொஞ்சம் பொறு*

**மகன்:**
*காற்றடிக்க பம் கொண்டு வரட்டேயணை*

***

**தகப்பன்:**
*உன் செல்ல மகன் ஏன் அழுகிறான்*

**தாய்:**
*அவன் "கொண்டா" என்று அழுகிறான்*

**தகப்பன்:**
*என்னத்தை*

**தாய்:**
*(Honda) மோட்டார்ச் சயிக்கிள் வேணுமாம்.*

***

**ஒருவர்:**
*தம்பி நீ இராசதுரையின் மகனா?*

**மற்றவர்:**
*இல்லையில்லை. அவர் எனக்குத் தகப்பன்.*

"மாசி" என்று எம் ஊரவர்களால் அழைக்கப்பட்டவர் மா.சின்னராசா அவர்களாவார். அவரது சில நகைச் சுவைகளை நாங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்

## மீண்ட சொர்க்கம்

காலை நேரம்
கண்ணாடியில் என்னைப் பார்க்கிறேன்...

குளிரில் நடுங்கும் என்னைத் - தன்
முந்தானை கொண்டு போர்த்துகிறாள்
"அன்னம்" ஆச்சி.

கையில் எண்ணெய் கொண்டு
விளக்கேற்றக் காளிகோயில் செல்கிறாள்
"ஆச்சிமுத்து" ஆச்சி.

தண்ணீர்க் குடத்தோடு தவமிருக்கிறாள்
எங்கள் தாகம் தீர்க்கும் - கிளிவெட்டி
"அன்னமுத்து" ஆச்சி.

படலை வந்து பாசம் வைத்து
பசியாத்த அழைக்கிறாள்
மயிலிட்டிப் "பிள்ளையாச்சி"

பார்வை இன்றிப் பக்குவமாய்
வண்ணப் பாய் பின்னுகின்றாள்
"சிலம்பி" ஆச்சி.

கைவீசி நடக்கும் ஒய்யாரம்
கண்வழி நிற்கும் சிருங்காரம்
தவறாமல் வருகிறாள் "தாமா".

செல்லமாய்க் கன்னம் தடவி
கொய்யகத்தால் முகம் துடைத்து
"செல்லாச்சி"யும் சிரிக்கிறாள்.

கர்வமாய்ச் சுறுசுறுப்பாய்
கூன் விழுந்த "ஆசையக்கா"வுடன்
கம்பீரமாய் நிமிர்கிறாள் "சின்னத்தங்கம்".
மடுமாதா பூசையும்
மனங்கோணா உபசரிப்பும்
"சின்னத்துரைக்கு" நிகராகுமோ!

நினைவுகள் சுமந்து
நிதர்சனம் பேசும் பேருருவாய்
"பெரியதுரை" தவமிருக்கிறாள்.

வட்ட வட்டத் தோசையில்
சுவை கூட்டி நாவூற வைக்கும்
"அழகம்மா" கைப்பக்குவம்.

கைவிளக்குமாறு தானெடுத்து மகள்
"செல்லப்பாக்கியம்" தானடக்கி
முற்றம் கூட்டுகிறாள் "தங்கமுத்து".

தேத்தண்ணி ஆறமுன்னம் வாங்கோடா...
குடிக்கக் கூப்பிடுகிறார்கள்
மாமான்ர அம்மாவும் "அன்னப்பிள்ளை"
அக்காவும்.

பழஞ்சோறு குழைத்தெடுத்து
பக்குவமாய் உருண்டையாக்கி அழைக்கிறாள்
வாஞ்சையுடன் "மத்தம்மா".

நோய் வந்தவேளை இருமடி தாங்கி
எந்தன் மார்தடவி பரிதவிக்கிறார்கள்
"தங்கமணி" "ராசமணி".

அன்புநிலை கடந்து கத்தியுடன் "மாண்டப்பா"
கோபமாய் ஓடிவர மீண்ட சொர்க்கம்
கலைந்திடவே
தரையெல்லாம் உதிர்ந்த இலைகள்.

– கனகசபாபதி செல்வநேசன்

## அங்காடிப் பொம்மைகள்

அர்த்தமற்ற பொழுதுகள்
அனாவசியப் பேச்சுகளால்
அற்பமாகப் போக்கப்படுகின்றன.
எனினும் ஆள் அரவமற்ற சந்துகளும்
அனாமதேய அழைப்புக்களும்
சொற்பமாகவே நோக்கப்படும்

சிபாரிசு - பட்டம் மற்றும் கண்டனம் - களியாட்டம்
இரட்டைப் பிறவிகளாகத் தோன்றும்
எனினும் காதல் தற்கொலையும்
காம அரங்கேற்றமும்
கிழமைக்கொன்று உசிதம்.

அபலைகளின் கற்பு சர்வ சாதாரணமாய்
அந்தகாரமாக்கப்படும்
எனினும் அந்நியச் செலவாணி வீதமும்
சாராய விலையேற்றமும் மட்டுமே
சென்ற கூட்ட அறிக்கையின் ஏகமனதான
தீர்மானமாக இருக்கும்.

தொலைவில் நடப்பவை கண்களுக்கு
புலனாகாவிடில்
நடக்கவே இல்லையே என்பது எளிது.
எனினும் அருகில் நடப்பவை குருடர்களுக்கு
புலனாவது சற்று கடினம் தான்.

உடுத்தியிருப்பது
சிவப்பாயினும் பச்சையாயினும் நீலமாயினும்
கனகச்சிதமாகப் பொருந்தியிருக்கும்
அரசியல் அங்காடிப் பொம்மைகள்...

– க.முரளீதரன்

## என்னுள்ளே ஒரு நேர்மாற்றம்...!

இருள் கடந்து ஒளியின்
அருள் கிடைக்கும் வேளை
உள் மனம் கிடந்து
வேகச் செய்தனர் - என்
வேகம் கோபமானது
என்ன செய்ய முடிந்தது
தோல்விகளையே சுமந்தேன்...
தொல்லைகள் தீரவென - வெஞ்
சொற்களை ஏவினர்
உணர்வுகளின் வலைக்குள் - என்
உளம் சிக்குண்டே போனது
மீளவும் முடியவில்லை
ஆழ வேர் விடாதபடி - என்னை
அசைத்தசைத்து இழுத்தெறிந்தனர்
அப்போதும் புரியவில்லை
இனியும் என்னால் முடியுமென
சோர்ந்து போன என்னை
சேர்ந்தே கைகோர்த்து அமிழ்த்தினர் ஆழமாக
மூச்சுத் திணற சேற்றில்..
கொல்லவெனப் புதைத்த சேற்றில்
மூச்சுக் காற்றின் வேகங் கொண்டேன்
வெல்லவென விவேகமுடன்
என்னுள்ளேயும் ஒரு நேர்மாற்றம்
தடைகள் தடங்களானது
இருள்கூட என் இடர் களைந்தது
என்னாலும் முடியும்
இன்றுதான் புதிதாய்ப் பிறந்தது போன்று
ஆழ்மனம் விழித்துக்கொண்டது
தேகம் வலுப்பெற்று
புது வாழ்வின் விடியலை நோக்கியே கால்கள்
முன்னோக்கி நடந்தன..!

– கனகசெந்தில்நேசன்

## விம்பங்கள்

ஆலயத் திருவிழா
அடியவர்கள் கூட்டம்
ஆடம்பர ஆர்ப்பரிப்பு
ஐஸ்கிறீம் கடையுள்ளும்...?
ஏழைச்சிறுவனும்
எட்டிப் பார்த்தே
ஏதலிக்கின்றான்!
சுவைப்பதற்கு துட்டின்றி...
மாய விம்பங்கள்!
மறுகரை தொடும் போதோ
கண்ணாடி முன்னின்று
நக்கிச் சுவைக்கின்றான்...
வலிகளின் விம்பங்களோடு...

– த.மோகன்ராஜ்

## உண்மை

எழுதத் தெரிந்தவர்கள்
நன்றாகவே எழுதுகிறார்கள்!

பேசத் தெரிந்தவர்கள்
நன்றாகவே பேசுகிறார்கள்

கணக்குத் தெரிந்தவர்கள்
கச்சிதமாகப் பார்க்கிறார்கள்!

ஏழையத் தெரிந்தவர்கள் மட்டும்
ஏனோ மௌனமாகிப்
போகிறார்கள்

– கணேசன் மதுஷன்